


அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளை
நினைவு வெளியீடு

# யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச் சவாரி

த. சண்முகசுந்தரம்



# யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச் சவாரி - ஓர் அறிமுகம்

ஒருவரின் மரணத்தை நினைவு கூருவதற்குப் பல வழிகள் உள்ளன. யாழ்ப்பாணத் தமிழர்கள் மத்தியில் தம் குடும்பத்தினர் ஒருவர் மரணித்து 31ஆம் நாள் நிகழும் அந்தியேட்டி சடங்கின்போது மரணித்தவரின் நினைவாக "கல்வெட்டு" என்ற பெயரில் சிறு செய்யுள் நூல் ஒன்றை அச்சிட்டு வெளியிடும் ஒரு மரபு உண்டு. மரணித்தவரின் வம்ச வரலாறு, அவரின் நற்குணங்கள் பற்றிய விபரங்களுடன் அவரது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் அவரின் மறைவு குறித்து இரங்கிப் பாடுவதாக இது அமையும். கிராமங்களில் இதற்கென்றே சில கவிஞர்கள் இருப்பர். பொருத்தமான வகையில் பெயர்களையும், சில விபரங்களையும் மாற்றிவிட்டு கல்வெட்டுப் பாடுபவர்களும் உண்டு. இத்தகைய கல்வெட்டுக்களின் முக்கியத்துவம் அந்தியேட்டிச் சடங்குடன் முடிந்துவிடும்.

கல்வெட்டுக்களுக்குப் பதிலாக மரணித்தவரை நெடுங்காலம் நினைவுகூரும் வகையில், அவரின் நினைவாக கவிதைத் தொகுதி அல்லது கட்டுரைத் தொகுதிகளை வெளியிடும் மரபும் கடந்த சில தசாப்த காலமாக யாழ்ப்பாணத்தில் நிலவிவருகின்றது. ரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் காலம்சென்ற தன் மகளின் நினைவாக ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்ட ஞாபகம் உண்டு. சிலவேளை அதுவே இவ்வகையில் முதல் முயற்சியாக இருக்கக்கூடும். இத்தகைய முயற்சிகள் மரணித்தவர்களுக்கு ஒரு நல்ல நினைவுச் சின்னமாகவும் எழுத்தாளர்களுக்கு ஒரு கௌரவமாகவும் அமைகின்றன.

"யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச் சவாரி" என்ற இந்நூல் அத்தகைய ஒரு முயற்சிதான். காலஞ் சென்ற திரு. சீனியர் கிருஷ்ணபிள்ளை அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் இந்நூலை வெளியிடுகின்றனர். இதில் மறைந்த அறிஞர் திரு. த. சண்முகசுந்தரம் அவர்களின் ஆறு கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

திரு. த. சண்முகசுந்தரம் அவர்கள் இலங்கையின் குறிப்பிடத்தக்க தமிழறிஞர்களுள் ஒருவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றியவர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் முதல் மாணாக்கர் ; மகாஜனக் கல்லூரி மூலம் புகழ் பெற்ற மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கியவர் ; நாடகம், நாவல், கவிதை, கட்டுரை முதலிய துறைகளில் சுமார் இருபத்தைந்து நூல்களின் ஆசிரியர் ; நாடறிந்த எழுத்தாளர்.

"யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச் சவாரி" முதலிய அவருடைய ஆறு கட்டுரைகள் ஒரு தனி நூலாக இப்பொழுது வெளியிடப்படுகின்றன. இவற்றுள் மாட்டு வண்டிச்சவாரி மட்டும் ஏற்கனவே 1986இல் ஒரு தனி நூலாக வெளிவந்தது. ஏனைய

கட்டுரைகள் அவ்வப்போது வெவ்வேறு இதழ்களில் வெளிவந்தவை. இப்போதுதான் ஒரு நூலில் இடம்பெறுகின்றன.

"யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச் சவாரி" நீண்ட காலமாக யாழ்ப்பாணக் கிராமங்களில் நிலவிவந்த ஒரு பொழுதுபோக்கு விளையாட்டுப் பற்றி ஒரு விரிவான விளக்கத்தைத்தரும் மிகப்பயனுடைய கட்டுரை. நாட்டாரியல் நோக்கிலும் பண்பாட்டு நோக்கிலும் இது முக்கியமானது. இதுபோன்ற ஒன்றே "ஈழத்தின் சைவக் கிராமிய வழிபாடு" என்ற கட்டுரை. இதுவும் சசற்று விரிவான முறையில் இலங்கையில் சைவத் தமிழர் மத்தியில் வழங்கும் கிராமிய, சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும். நவீனத்துவச் செல்வாக்கால் அவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் ஆசிரியர் நுட்பமாக விளக்கியுள்ளார். மானிடவியல், நாட்டாரியல் நோக்கில் மிக முக்கியமான கட்டுரை இது.

"சித்தர் பரம்பரை - ஓர் ஆய்வு" ஒரு சிறு கட்டுரை எனினும் நிறையத் தகவல்களைக் கொண்டுள்ளது. உமர்கயாம் போன்ற சூஃபி மெய்ஞானக் கவிஞர்களையும் சித்தர்களையும் இணைத்து நோக்குவதில் சில பிரச்சினைகள் உள்ளன எனினும், இக்கட்டுரை தரும் சித்தர் பற்றிய பொதுவான விளக்கமும் ஈழத்துச் சித்தர் நெறி பற்றிய குறிப்புகளும் முக்கியமானவை.

"பண்டிதமணி பார்வையில் ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள்" என்ற கட்டுரை பண்டிதமணி பற்றியும், ஈழத்துப் புலவர்களின் முக்கியத்துவத்தை அவர் எவ்வாறு நிறுவினார் என்பது பற்றியும் சில முக்கியமான தகவல்களை எமக்குத் தருகின்றது. இதுபோல் "பேராசிரியர் சு. வித்தியானந்தன் பரம்பரை" என்ற கட்டுரை பேராசிரியர் பற்றிய ஒரு முழுமையன சித்திரத்தைத் தருகின்றது. "புலமைக் குரல்கள்" என்ற கட்டுரையில் பாரதியாரையும் பாவலர் துரையப்பாபிள்ளையையும் ஒப்பு நோக்கு வதன் ஊடாக பாவலரின் முக்கியத்துவத்தை திரு. சண்முகசுந்தரம் வலியுறுத்த முனைகிறார்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆறு கட்டுரைகளும் ஈழத் தமிழரின் கலை, இலக்கிய, பண்பாட்டுப் பாரம்பரியத்தைப்பற்றிப் பேசுகின்றன. இத்தகைய ஒரு நூல் காலத்தின் தேவை எனலாம். திரு. சண்முகசுந்தரம் அவர்களின், பலராலும் அறியப்படாத இக் கட்டுரைகளைத் தேடியெடுத்து தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது மறைந்த திரு. சீ. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும், திரு. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் ஒரு அழியாத நினைவுச் சின்னமாக அமையும் என்று நம்புகின்றேன். இதன் வெளியீட்டாளர்கள் நம் பாராட்டுக்குரியவர்கள்.

**எம். ஏ. நுஃமான்**
28-12-2011

# புலமைக் குரல்கள்

## தலைப்பாகைகள் பேசின

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்......"

(பாரதியார், விநாயகர் நான்மணிமாலை - 25)

என்றது பாக்குநீரிணைக்கு அப்பாலிருந்து வந்த பாரதியாரின் குரல். பாக்குநீரிணைக்கு இப்பால் உள்ள யாழ்ப்பாணத்திலிருந்து எழுந்தது பாவலர் துரையப்பாபிள்ளையின் குரல். பாரதியாரின் கருத்தை அழுத்தந் திருத்தமாகக் கூறியது பாவலரின் குரல்.

"கல்வித் திறனை யுலகோ ரறியக்
கழறிட வில்லையிக் கும்மியையான்
நல்வித மாகநம் நாடு திருந்த
நவிலுகி றேனடி சங்கமின்னே."

(சிந்தனைச் சோலை - பக் 18)

நாட்டின் நலனைக் கருதினார் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் ; அதற்காகவே தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார். அவரின் கல்வித் தொண்டு, பத்திரிகைத் தொண்டு, சமுதாயத் தொண்டு, சீர்திருத்தத் தொண்டு இவைகளை மதிப்பிடுவோம். அப்போதெல்லாம்,

"தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின் றேனாத லாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவ தேநலம் சங்கமின்னே"

(சிந், பக் - 18)

பாவலரின் இக்கூற்றை நோக்குதல் சாலப் பொருந்தும். தன்னிடம் இருந்த செய்யுள் திறமையை நாடு நலமுற அவர் பயன்படுத்தினார். அத்தொண்டிலே தன்னலம் இல்லை. அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

"கவிபாடிப் பரிசுபெறான் மனம்போல ஒன்று"

என்று மற்றொரு புலமைக்குரல் கதறியது. "கவி" பாடுவதன் நோக்கம் பரிசோ? பரிசு பெறாவிட்டால் கொதிப்போ? இவை கேள்விக்குரிய அலுவல். இந்தக் கேள்விகளுக்குப் பாரதியாரும் பாவலரும் எந்த மறுமொழி கூறியிருப்பார்களோ தெரியாது.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களுக்கு எதிர்ப்பு இருந்தது. அதனால் அவர் வருத்தமுற்றார் ; பரிசு பெறவில்லை என்று ஏங்கவில்லை.

"புண்ணில்மொய் ஈக்களைப் போலக் கசடர்
புகல்வர் பலகுற்றம் சங்கமின்னே."

(சிந். பக் - 19)

"கும்மி, கீர்த்தனம் முதலியவை சிற்றிலக்கியப்பாற்படுபவை", என்பது செந்தமிழ் வாணர் சிலரின் கருத்து. பாரதியார் இந்தச் செய்யுளமைப்பைப் பயன்படுத்தியது போலப் பாவலரும் நன்கு பயன்படுத்தினார்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்றது பாரதியாரின் குரல்.

"நல்வரு மானந் தரத்தகும் பல்பயிர்
நாட்டிக் கிருஷிகம் செய்தாக்கால்
செல்வம் பெருகும்நம் தேயஞ் சிறந்திடும்
சிந்தித்துப் பாரடி சங்கமின்னே."

(சிந். பக் - 25)

என்றது பாவலரின் குரல்

"கோணிகள் செய்வோம் இரும்
பாணிகள் செய்வோம்."

என்ற பாரதியின் குரலுடன்

"குண்ஃசி ஊசி நெருப்புக்குச் சாதிய
கூறரும் வேறுபல் வேலைகளால்"

என்ற பாவலரின் கருத்தை நோக்கலாம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – இங்கு
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு."

என்பது பாரதியாரின் செய்யுள்.

"கூடி முயற்சி செய்து சமுதாயங்
குலவும் பலவிங்கு தாபித்தவர்
நாடிநற் கைத்தொழிற் சாலை திறத்தல்
நலமல்ல வோஅடி சங்கமின்னே."

(சிந். பக் 29)

என்று பாவலர் கூறுகின்றார்.

ஆங்கிலக் கல்வியைக் கண்டு வெகுண்டவர் பாரதியார்

"செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்."

(பாரதியார் சுயசரிதை - 28)

என்றார் பாரதியார்.

ஆங்கிலத்தை வெறுக்காத பாவலர், ஆங்கிலரைப் பார்த்துக் குரங்காக நடக்கும் போலித் தமிழரை எள்ளி நகையாடுகின்றார்.

"செந்தமிழ் சற்று மறியாத வாங்கிலர்
சீர்மை யிருந்திங்கு வந்தவர்போல்
நந்தமி ழர்சிலர் செந்தமிழ் பேசிட
நாணுகி றாரடி சங்கமின்னே."

(சிந். பக் 37)

கல்விக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் படையல் செய்த பாவலரின் நகைச்சுவைக்கும் ஏக்கத்திற்கும் எடுத்துக்காட்டு ஒன்று :-

"ரத்தா சயமெங் கிருக்கென் றறியாத
ஈன மிகுந்தபல் வாலிபர்கள்
லத்தீன் கிறிக்முழு மூச்சாய்ப் படிக்கிறார்
லாபமங் கென்னடி சங்கமின்னே."

(சிந். பக் - 39)

பாவலர் சிறந்த விஞ்ஞான ஆசிரியராகத் திகழ்ந்தாரென்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

"வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டி வைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்."

(பெண்கள் விடுதலை 3)

என்றது பாரதியின் கும்மி.

"குண்டான் வழித்திடும் பெண்களுக்குக் கல்வி
கூடாதெனச் சொன்ன தக்காலம்
பண்டாய்ப் பறந்திடப் பெண்களெங் குங்கலை
பற்றுகி றாரடி சங்கமின்னே."

(சிந். பக் - 40)

என்பது பாவலரின் கும்மி.

"பறையருக்கும் இங்குதீயர்
புலையருக்கும் விடுதலை."

(விடுதலை - 1)

என்று பாடினார். உழுத்த சமுதாயத்தை தகர்த்தெறிய விரும்பிய அதர்வெடி பாரதியார். சமுதாய ஊழல்களைப் படிப்படியாக வெடிக்க வைத்த பசுமரத்தாணி போன்றவர் பாவலர். பாவலர் நிதானமானவர். எனவே,

"கீழ்ச்சாதி யாரொரு போது முயர்ந்து
கிளர்ந்த நிலைக்கு வருதலின்றிப்
பாழா யிருக்க விடுதலெம் சாதியின்
பாதக மல்லவோ சங்கமின்னே."

(சிந். பக் - 66)

என நிதானக் குரல் எழுப்பினார் பாவலர். பாரதியாரின் ஆவேசமும் பாவலரின் ஏக்கமும் இன்றும் நிறைவேறாமல் இருப்பது கவலைக்குரியது.

பாவலரின் கடைசிக் காலம் "ஆத்மவிசாரத்திலே" சென்றது.

"நோயென்ன செய்யுந் தரித்திர மென்செயும்
நூறெனுமெண்
ணாய்வரு மின்ன லெனையென்ன செய்யு
மறிமனமே
சேயனின் மேற்கரு ணாநிதி யாய
சிவபெருமான்
நேயமென் நெஞ்சி னிறைந்தெந்த நாளும்
நிலைத்திடவே.

(சிந். பக் - 4)

பாரதியாரின் கவலை நிறைந்த நேரம் எழுந்த குரலை நோக்கலாம்.

"சக்தி யென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால்
பயமனைத்தும் தீரும்."
என்றும்

"சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக"

என்றும் பாடி உள்ளம் அமைதி கொள்கிறார் பாரதியார்.

காந்தியைப் பற்றிப் பாரதியார் கூறியவை :-

"வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!"

"அட்ட திக்கும் புகழ் காந்தி மகாத்மா" என்கிறார் பாவலர்.

சீரிய நோக்கிற்காக வாழ்ந்தவர் பாரதியார். பாவலரும் அப்படியே வாழ்ந்தார். அதனால் இன்னல் பெரிதும் பட்டார். பாவலர் பட்ட இன்னல் பல. பாவலரின் வாழ்க்கையின் திறவுகோலாக அமைவது நம்பிக்கை ; மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் நம்பிக்கை.

"நற்செய லொருபோதும் நானிலத் தழியாது
நான்பெற்ற போத மிதுவே"

(சிந். சகலகுண சம்பன்னன் - பக் 171)

ஏழையைக் கண்டு கதறினார் பாரதியார். தனியொருவனுக்கு உணவில்லை என்றால் இந்தப் புவியை ஒழிப்போம் என்றார். பாவலரின் அடக்கமான குரல்

"செய்யுங் கமத்தின் வரும்படி யோகடன்
தீர்க்கவும் போதா தெனிலவர்க்கிங்கு
உய்யும் வழியென்ன வோஜய கோஎங்கள்
உள்ள முருகுதே சங்கமின்னே."

(சிந். பக் - 21)

பாரதியாரும் பாவலரும் தலைப்பாகை அணிந்தவர்கள். பாரதியார் தலைப்பாகை பற்றி பாடவில்லை போலும். பாவலர் தலைப்பாகை பற்றிப் பாடினார்.

"முற்காலத் தோர்தலைப் பாகை யணிதல்
முறையென்ற தின்றி வெளித் தோற்றத்தில்
தற்காலத் தோரஃ தில்லாமல் வெறுஞ்.....
சாதிய ராகினார் சங்கமின்னே."

(சிந். பக் - 55)

பாரதியாருக்கும் பாவலருக்கும் தலைப்பாகை உண்டு ; ஒளிமிக்க கண்கள் உண்டு; மீசை உண்டு. பாரதியாரின் குரல் தமிழ் அணங்கின் அருளாட் கிடைத்த உணர்ச்சிக்குரல். பாவலரின் குரல் முன்செய் புண்ணியம் திரண்டு நாவுக்கரசர் பாதையிற் செல்லவைத்தது. அதன் எதிரொலிதான் பாவலரின் செய்யுள். பாரதியாரின் துடிப்பை, உணர்ச்சிக் குமுறலை, ஆவேசத்தை, சொல் முறுக்கை பாவலரிடம் காணவில்லை எனலாம். பாவலர் அடக்கமாக, ஆழ்ந்த கருத்தைப் பழகுதமிழில் அள்ளி அழகாகச் சொரிந்தார்.

பாரதியாரைப் போலப் பாவலரும் இலகுதமிழ், பழகுதமிழ், இனிய தமிழை விரும்பினார். இருவருக்கும் இசைத்தமிழிற் பெருவிருப்பம் இருந்தது. இதனைப் பாவலரின் "கீதரச மஞ்சரி"யின் முன்னுரையிலே காணலாம். இசைத் தமிழின் மேன்மையை நன்குணர்ந்த பாவலர் சங்கீத மகத்துவம் பற்றிப் பாடியுள்ளார்.

சங்கீத மகத்வமதைச்
சாற்றளவ ராலியலும்

இங்கித மிகுமதனுக்
கிணையாயெதை மொழியத்தகு
மிகபர மெனினுமிகு தலமதில் – சங்கீத

விண்ணுலக மீதுந்தொண்டர்
விள்ளரு மினிமையோடு
கண்ணுதல் நிகர்பரற்குக்
கனதுதியை அனுதினமும்
கழறுவராங் களிகொளவே – சங்கீத

ஏதுக்கும் உருகாவொன்
றிசைக்குமிக் குருகுமெனச்
சாதிக்கும் பழமொழியித்
தாரணிதனிற் சீரறிஞர்கள்
ஓதியதுள தாதலினுயர் – சங்கீத

(சிந். பக் - 129)

பாவலருக்கு இசை நுணுக்கங்களை எடுத்த அறிவித்தவர் அளவெட்டி நாயனப் புலவர் "தர்பார்" கந்தையா என்பர். உறுப்பெல்லாம், நரம்பெல்லாம், வாழ் நாளெல்லாம் பண்ணாக வாழ்ந்த பாவலருக்கு இத்தகைய உதவி கிடைத்ததும் நன்றே.

சில சொற்களுடன் இக் கட்டுரை முடிகின்றது. பாரதியாரும் பாவலரும் யாத்த செய்யுள்கள் சுவைமிகு குவியல் போன்றவை. சிலவற்றின் சுவை காட்டும் முயற்சி இது. செய்யுள் விருந்து வைக்கும் ஆராய்ச்சி செய்வதற்கு இளைஞர் யாரும் வாராரோ?

மலையைக் காணத் தூரம் வேண்டும். பெரிய நிகழ்ச்சிகளை மதிப்பிட காலம் வேண்டும் என்பர் ஆன்றோர். பாரதியாரைச் சிறியதொரு வேதாந்தச் சிமிழிலோ அல்லது புலமைச் சிமிழிலோ அடக்கி வைக்க முயற்சி செய்தனர் செய்யுள் நலம் ஆய்வோர். பாரதியார் அதற்கு அப்பாற்பட்டவர் ; அதேபோன்ற விதி பாவலருக்கு ஏற்படக்கூடாது. பாவலர் பிறந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன. அவரின் பன்முனைத் தொண்டினைத் மதிப்பிட ஏற்ற காலம் இதுவேயாம்.

*பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு மலர்*
*நூற்றாண்டு விழாச்சபை - 1972*

# பண்டிதமணியின் பார்வையில் ஈழத்துத் தமிழ்ப் புலவர்

ஈழத்துத் தமிழ்ப் புலவர்களுக்கென ஒரு இடம் உண்டு என்பதை நன்கு நேரில் வலியுறுத்தியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர். நாவலரின் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தியவர் பலர். அவரில் முக்கியமானவர் இருவர். இருவரும் தமிழ் வளர்த்த பிள்ளைகள் ; பெரும் பிள்ளைகள் ; இருவரும் பிள்ளையார்கள். ஒருவர் வடமராட்சியைச் சேர்ந்த தும்பளையூர் பேராசிரியர் கலையருவி க. கணபதிப்பிள்ளை. மற்றவர் தென்மராட்சியைச் சேர்ந்த மட்டுவில் பண்டிமணி, இலக்கிய கலாநிதி, சித்தாந்த சாகரம் சி. கணபதிப்பிள்ளை. இவர்களுக்குப் பின்னர் இக்கருத்தைப் பெரிதும் வலியுறுத்துபவர் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்துத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன்.

பண்டிதமணி எப்பொருளையும் விளக்கினாலும் திட்டவட்டமாகத் தெளிவாக “வெட்டு ஒன்று ; துண்டு இரண்டு” என்ற முறையில் விளக்குவார். ஈழத்துப் பூதந் தேவனார் தொடக்கம் இன்றைய புலவரில் ஒருவரான ம. பார்வதிநாதசிவம் வரை பண்டிதமணி தெளிவான கொள்கையுடையவர். “என்மனார் புலவர்” என்ற பாணியில் அவர் கூறுவது கிடையாது. அவருடைய கருத்துக் கடைந்து எடுக்கப்பட்டிருக்கும். இப்படியான கருத்து உரைக்கும் ஆற்றல் எப்படி வந்தது அவருக்கு என்பதை முதலில் ஆராயலாம்.

முதலாவதாக, பண்டிதமணியின் இளமைப் பின்னணியை நோக்கலாம். பண்டிதமணியின் உறவினர் உரையாசிரியர் மட்டுவில் கணபதிப்பிள்ளை வேற்பிள்ளை. இளைஞன் கணபதிப்பிள்ளை, வேற்பிள்ளையின் நிழலில்

வாழ்ந்தவர். ஆனால் அவரிடம் முறையாகப் பாடம் கேட்கவில்லை. ம. க. வேற்பிள்ளையின் புதல்வர் ஐவர். அவர்களில் இருவர் தமிழ் அறிஞர். இவர்களின் கருத்துப் பண்டிதமணியைக் கவர்ந்தது. மூத்தவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ் ஆசிரியரும் "இந்துசாதனம்" பத்திரிகை ஆசிரியருமான ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை, மற்றவர் குருகவி மலையருவி ம. வே. மகாலிங்கசிவம். இருவரும் பண்டிதமணியின் உறவினர். உறவினர் என்பதிலும் பார்க்க உற்ற நண்பர். இவ்விருவரும் ஈழத்துத் தமிழ்ப் புலவர் பரம்பரையைப் போற்றி வளர்ப்பவர் ;கருத்துச்செல்வர்.

இரண்டாவதாகப் பண்டிதமணியின் நல்லாசிரியர்களைப் பற்றி நோக்கலாம். "இராமநாதமான்மியம்" பாடிப் புகழ் பெற்ற வித்துவான் பொன்னம்பலபிள்ளை பண்டிதமணியின் ஆசிரியரில் ஒருவர் ; சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் கல்வித் தனி முத்திரையைப் பண்டிதமணி சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் பெற்றார். குமாரசுவாமிப் புலவரின் புலமை நிகரற்றது. தமிழ்த் தாத்தா எனப் போற்றப் படும் உ. வே. சாமிநாத ஐயரின் "சீவகசிந்தாமணி" முதற் பதிப்பில் பிழை பல கண்டு நிறுவியவர் குமாரசுவாமிப் புலவர். நாற்பதிற்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தவர். நாவலர் பரம்பரையைப் போற்றி வளர்த்தவர். ஈழத்துப் பெருமையைக் குமாரசுவாமிப் புலவர் பண்டிமணிக்கு எடுத்துரைத்து வந்தார்.

மூன்றாவதாகப் பண்டிதமணியின் திருநெல்வேலி "ஈரப்பலாவடி" இலக்கியப் பூம்பந்தலை நோக்குவது நன்று. இங்கிருந்த வீடு ஒன்றில் தமிழ் அறிஞர் பலரும் அவ்வப்போது கூடுவர். பேச்செல்லாம் மூச்செல்லாம் சைவமும் தமிழும் பற்றியவையாக இருக்கும். இவர்களில் இருவர் பண்டிதமணியின் உறவினர். ஒருவர் அகநூல் கலாநிதி கோ. சிவப்பிரகாசம். இவர் பருத்தித் துறையைச் சேர்ந்த பெரும்புலவர் குடும்பத்தில் தோன்றியவர். வேற்பிள்ளையின் தந்தையார் கணபதிப்பிள்ளை மட்டுவில் உடையார் ; ஆனால் பருத்தித்துறையை சேர்ந்தவர். ஆங்கிலப் புலமை நிரம்பிய சிவப்பிரகாசம் மிகுந்த கடும் விவேகி. தமிழ் நூல்களுக்கெல்லாம் மேலைத்தேய பாணியில் விளக்கம் கொடுப்பார். மற்றவர் ம.க. வேற்பிள்ளையின் கடைசி மகன் விஞ்ஞானப் பட்டதாரி, நடராசா. விஞ்ஞான ஆசிரியராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் பல ஆண்டுகள் நற்பணி புரிந்தவர் ; பண்டிதமணியின் நண்பர். அட்சர கணிதம், கேத்திர கணிதம் என்பவற்றை பண்டிதமணிக்கு படிப்பித்தவர். ஈழத்து தமிழ்ப் பரம்பரை என்றால் அதனை ஒருபோதும் விட்டுக்கொடுக்கமாட்டார். "வடக்கே

உள்ளதெல்லாம் தெற்கேயும் உண்டு" என்பர். வடக்கு என்பது தமிழ் நாடு ; தெற்கு என்பது ஈழம். இது பண்டிதமணியைப் பெரிதும் கவர்ந்தது.

நான்காவதாகப் பண்டிதமணியின் திருநெல்வேலிச் சைவ ஆசிரிய கலாசாலை நண்பர்களை நோக்கலாம். பண்டிதமணியின் கல்லூரி அதிபர் கல்விமான். அவர் மயிலிட்டி சி. சுவாமிநாதன் ; கலைப்பட்டதாரி ; கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கற்றவர். இந்திய விடுதலை எழுச்சியினால் பெரிதும் கவரப்பட்டவர் ; ஈழத்து இலக்கிய பரம்பரையை இக்கால வரலாற்றுக் கோட்பாடுகளுக்கு ஏற்ப விளக்குவதில் வல்லவர் ; மிகவும் சுவையாக கடினமான பொருள்களையெல்லாம் விளக்குவார். மற்றவர் சிந்தனைச் செல்வர். கல்விமான் அளவெட்டி திரு பொ. கைலாசபதி, மெய்ப்பொருளில் பெரும் நாட்டம் உடையவர் ; தமிழ் இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு மெய்ப்பொருளின் அடிப்படையில் புதிய விளக்கம் கொடுப்பார் ; தமிழ் நெடுங்கணக்கிற்குள் சைவ சித்தாந்த அடிப்படையில் உயிர் உடல் என்று தெளிவுபடுத்துவார். எனவே இந்த நான்கு பின்னணிகளும் பண்டிதமணியின் உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. ஆனால் ஒன்று, தரம் குறைவான இரும்பை வைத்து கூரிய கத்தியை உருவாக்க முடியாது. நல்ல உருக்கை வைத்துத்தான் கூரிய கத்தியை உருவாக்கலாம். பண்டிதமணி சீரிய உருக்கு. மேலும் ஒன்று உண்டு பண்டிதமணியின் நோக்கு மூலம் ஈழத்துப் புலவர் பரம்பரை ஒளிவிட்டு வீச வேண்டும் என்பது அவரின் குலக் கடவுள் சந்திர மௌலீசுவரனின் விருப்பம் போலும் என்பர் அவரின் நண்பர்.

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் பண்டிதமணியைக் காண விரும்பினார். அந்தப் பேராசிரியர் அந்தச் சந்திப்பின் போது "இரகு வம்சம்" பற்றிச் சில விளக்கம் கேட்க விரும்பினார். "இந்த இடங்களோ?" என்ற பண்டிதமணி "அச்சொட்டாக" அந்த இடங்களைக் குறிப்பிட்டார். பேராசிரியருக்கு சற்று வியப்பாக இருந்தது. "உங்களுடைய நிலையில் விளங்காமல் இருப்பவை இவையாக இருக்கலாம்" என்றார் பண்டிதணி. பின்னர் விளக்கமும் இடை இடையே இரகுவம்ச நூல் நயமும் பண்டிதமணியின் தமிழ் மணக்கும் வாயிலிருந்து வந்தன. அது பெருவிருந்து.

"நாவலருக்கு ஞானகுருவில்லை ; எனவே அவர் வணக்கத்திற்குரியவர் அல்லர்" என்ற "புரளி"யைச் சிலர் கட்டிவிட்டனர். இது பற்றிப் பண்டிதமணியிடம் கேட்டேன். தன் தமிழ்த்தாடியை தடவிவிட்டுப் பண்டிதமணி விளக்கம் தந்தார். "தன்னை வணங்கும்படி நாவலர் ஐயா ஒருபோதும் கேட்டதில்லை. பின் வந்தவர்கள் நாவலரை வணங்குகின்றனர். இதற்கு நாம் என்ன செய்யலாம்?"

மீண்டும் அமைதி. "தோன்றாத சிவநாதனின் தோற்றம் குருநாதன். குருநாதனிடம் ஞானதீட்சை பெறலாம் ; ஆனால் சிவநாதனே குருநாதனாக வந்தால் அதுவே பூர்வ புண்ணியம். சம்பந்தபிள்ளைக்குப் பசி வந்தபோது, அப்பருக்குச் சூலைநோய் வந்தபோது , சுந்தரருக்கு மால் என்னும் மயக்க நோய் வந்தபோது, மணிவாசகர் பொன்னுடன் சென்றபோது சிவநாதனே குருநாதனாக வந்தார். இது உண்மை. அதே போன்று நாவலருக்கு வைத்தீசுவரப் பெருமானின் அருட்பார்வை கிட்டியது. இதனை அவர் தன் பெரியபுராண வசனத்தில் மிகவும் தன்னடக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார்."

ஈழத்துத் தமிழ்ப்புலவர்களின் ஆக்கம் வடக்கே உள்ளவர்களின் ஆக்கத்திற்கு எவ்விதத்திலும் குறைந்தது அன்று என்பது பண்டிதமணியின் திட்டவட்டமான கருத்து. இதற்குப் பண்டிதமணி அவ்வப்போது கொடுத்த விளக்கம் பல. அவற்றை இங்கு தருவது இயலாத அலுவல். இரண்டை மட்டும் குறிப்பிடலாம். முதலாவது கலையருவி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பற்றியது. பண்டிதமணியின் "இலக்கியவழி" நூலை மறுபதிப்பு வரச்செய்து, துணிந்து பாடநூலாக்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. ஒருநாள் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றி பேச்சைக் கிளப்பினேன். இப்படிப் பண்டிதமணியை நோண்டிவிட்டால் போதும். மணிமணியான கருத்துவெள்ளம் பெருகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் "காதலி ஆற்றுப்படை" என்னும் செய்யுள் நூல் பற்றி பண்டிதமணி பேசினார். பழைய இலக்கிய வடிவை வைத்துப் புதிய பொருளைக் கையாளலாம் என்பதைப் பண்டிதமணி விளக்கினார். இதன் மறு பதிப்பை உரையுடன் வெளியிடும்படி கேட்டார் பண்டிதமணி. தானும் உதவி செய்வதாகக் கூறினார். இது கைகூடவில்லை. கலையருவியும் பண்டிதமணியும் இன்று மறைந்துவிட்டனர். பண்டிதமணியின் தூய எண்ணம் இன்று கைகூடவில்லை.

கவிஞர் தேசியவிநாயகம்பிள்ளையின் பாடல்களை எம்மவர் சுவைத்து மகிழ்ந்தனர். பண்டிதமணியும் சுவைத்தார். அதேநேரம் யாழ்ப்பாணத்து நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடல்களை மேலும் உயர்த்தி வைத்தவர் பண்டிதமணி. "இலங்கை வளம் கேளாத செவியென்ன செவியே, இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே" என நவாலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் பாடலைச் சுவைத்தவர் பண்டிதமணி. ஒருநாள் "கற்பனைவாலும் மொழி பெயர்ப்புவாலும்" பற்றிப் பண்டிதமணி குறிப்பிட்டார். தேசிகவிநாயகம் பிள்ளையின் புலிப்பாடலில் வரும் "வால்நுனி சுற்றுது பார் ; வட்டம் சுழலுது பார் என்ற கருத்து ஆங்கிலக் கதையின் மொழிபெயர்ப்பு. இது "மொழிபெயர்ப்பு வால்"

சோமசுந்தரப் புலவரின் கத்தரித் தோட்டத்து வெருளி பற்றிய பாடல் "கற்பனை நிரம்பிய சொந்த வால்" பயிரை மேயவந்த பசு வெருளியைப் பார்த்து வெருண்டு ஓடியது. வாலைக் கிளப்பிக் கொண்ட ஓடியது. சும்மா ஓடவில்லை. "வாட்டமில்லாப் பயிரை மேய வந்த பசு வாலைக் கிளப்பிக் கொண்ட ஓடியது ; வெடி வாலைக் கிளப்பிக் கொண்டு ஓடியது" இது சோமசுந்தரப் புலவரின் கற்பனையில் பிறந்த "சொந்த வால்". ஈழத்து வால் சிறப்பானது.

இன்றும் தமிழ்நாட்டில் உள்ள பலர் "ஈழத்துத் தமிழ்ப் புலவர்" என்றால் ஏதோ "அக்கரை சீமைப் புலவர்" என்ற பாணியில் எழுதுகின்றனர் ; பேசுகின்றனர். இக் கருத்தைப் போக்கி ஈழத்துத் தமிழ்ப் புலவர் பரம்பரையைத் தன் நோக்கினால் உயர்த்தியவர் பலர். அவரில் முக்கியமான ஒருவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை. இவர் ஈழத்துப் புலவர் பலரின் ஆக்கங்களுக்கு முன்னுரை வழங்கியுள்ளார் ; பாராட்டு வழங்கியுள்ளார் ; சுவைக் குறிப்பு எழுதியுள்ளார். இவற்றைத் திரட்டி ஆராய இளம் தலைமுறையினர் முன்வர வேண்டும். இதை வழிநடத்த வல்லவர் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்துத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். இந்த நல்ல நாளை எதிர்பார்த்து நிற்போமாக.

*பண்டிதமணி நினைவுமலர்*

*பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை 1989, உரும்பிராய் மேற்கு.*

# பேராசிரியர் வித்தியானந்தன் பரம்பரை

பரம்பரை என்ற சொல்லிற்கு இரண்டு விளக்கம் தரலாம். ஒன்று பிறந்து வளர்ந்த பரம்பரை. மற்றது மக்களை உருவாக்குகின்ற கல்விப்பரம்பரை. மனிதனைப் பரம்பரை உருவாக்குகின்றது. இது ஒரு சாராரின் கருத்து. மனிதனைச் சூழ்நிலை உருவாக்குகின்றது. இது மற்றொரு சாராரின் கருத்து. மூன்றாவது சாராரின் கருத்துப்படி வேண்டிய போதெல்லாம் தனக்கு வேண்டியவரைக் கடவுள் உருவாக்குகின்றார். இந்த மூன்று சாராரின் கருத்தும் பேராசிரியர் வித்தியானந்தனைப் பொறுத்தவரையில் பொருந்தும்.

பேராசிரியர் வித்தியானந்தன் நல்ல பரம்பரையில் பிறந்தவர். நல்ல சூழ்நிலையில் வளர்ந்தவர். இவரின் குடும்பம் முழுவதுமே மாவிட்டபுரம் முருகனின் தொண்டர், தமிழ்க் கல்வியை வளர்ந்தவர். பேராசிரியர் வித்தியானந்தன் நல்ல கல்விப் பரம்பரையில் கற்றவர். ஈழத்துத் தமிழில் பரம்பரை ஒன்றைச் சிறப்பாகவும் தமிழ் கூறும் நல்லுலகத்துப் பரம்பரை ஒன்றைப் பொதுவாகவும் பேணி வளர்த்தவர். வளர்த்துக்கொண்டே இருப்பவர்.

தமிழியல் தென்றலாம் பேராசிரியர் வித்தியானந்தன் எழுதிய முதலாவது நூலின் பெயர் "இலக்கியத் தென்றல்". இந்த நூல் 1953இல் வெளிவந்தது. இந்த இலக்கியத் தென்றல் இன்றுவரையும் மெல்லென வீசிக்கொண்டே இருக்கின்றது. தென்றல்தான் சுகம் பெறுகின்றதோ தெரியாது ; ஆனால் பல கோடி உயிர்களுக்கு இன்பம் அளிக்கின்றது. தென்றல் புயலாக மாறும் ; பின்னர் புயல் தென்றலாக மாறும். இது இயற்கையின் விதி. ஆனால் தமிழியல் தென்றல் வித்தியானந்தன் ஒருபோதும் புயலாக மாறியதில்லை: புயலுக்குரிய சீற்றம் அவரிடமில்லை. அன்பு, அடக்கம், பண்பு நிரம்பியவர். கடவுள் மீது செலுத்தம் அன்பு ஒருபுறம் ; தன் மாணவன் மீது செலுத்தும்

அன்பு மற்றொரு புறம். இவற்றையெல்லாம் நன்கு விளங்கவேண்டுமானால் பேராசிரியர் வித்தியானந்தனது குடும்பப் பரம்பரையும் அவரின் கல்விப் பரம்பரையும் அவர் உருவாக்கிய மாணவர் பரம்பரையும் நோக்குதல் பொருத்தமான செயல்.

இன்றும் ஆண்டுதோறும் ஆடி அமாவாசை நாளன்று யாழ்ப்பாணத்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனைக் காண வேண்டுமானால் வீமன்காமம் மகாவித்தியாலயத்திலேதான் காணலாம். ஆண்டு தோறும் சோறு வழங்கல் நடைபெறும். மாவை முருகன் அடியாருக்கு சோறு வழங்கும் பணியை பேராசிரியர் வித்தியானந்தன் தானே நின்று நடாத்தி வைப்பார். இது இவரின் பரம்பரைத் தொண்டு. இந்தப் பரம்பரை இறை அன்பை வளர்த்த பரம்பரை. கல்வியை - சிறப்பாக தமிழ்க் கல்வியை வளர்த்த பரம்பரை; முருகனுக்கு தொண்டு செய்யும் பரம்பரை. மாவிட்டபுரம் முருகன் கோயிலுக்கு முன்பாக இன்றும் மூன்று அறக்கட்டளைகள் இருக்கின்றன. ஒன்று மாவிட்டபுரம் முருகன் கோயில் கிழக்கு வாயில் கோபுரம். மற்றது அதற்கு அருகில் அமைந்துள்ள "உடையார் மடம்" மூன்றாவதாக அமைந்திருப்பது கலைக்கோயில் வீமன்காமம் மகாவித்தியாலயம். மாவை முருகன் கோயிலிலிருந்த ஒரு கல் தூரம் வடக்கே போனால் மற்றொரு கலைக்கோயில் இன்றைய நடேசுவராக்கல்லூரி அமைந்துள்ளது. கோபுரம் ஒன்று, மடம் ஒன்று, கலைக்கோயில் கல்லூரி இரண்டு ஆகியவற்றை மக்களுக்கு அளித்த பரம்பரையில் வந்தவர் பேராசிரியர் வித்தியானந்தன். கோபுரத்தை அமைத்தவர் பேராசிரியரின் மூதாதையர், இக்குடும்பத்தை "உடையார் குடும்பம்" என்பர் பொதுமக்கள். மடத்தைக் கட்டியெழுப்பியவரும் இக்குடும்பத்தினர். வீமன்காமம் மகாவித்தியாலயத்தைக் கட்டி எழுப்பியவர் சின்னத்தம்பி உடையார். பேராசிரியரின் தகப்பன் வழிப் பேரனார். வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் முகாமையாளராக இருந்தவர் பேராசிரியர். நடேசுவராக் கல்லூரியைக் கட்டி எழுப்பியவர் குருநாத உடையார். இவரும் பேராசிரியரின் பரம்பரையைச் சேர்ந்தவர்.

இனிப் பேராசிரியர் வித்தியானந்தனின் குடும்ப பரம்பரையை நோக்கலாம். தகப்பனாரின் பெயர் சுப்பிரமணியம். சுப்பிரமணியத்தின் தகப்பனார் சின்னத்தம்பி உடையார். நாவலருக்குப் பின்னர் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர் இந்த உடையார். சின்னத்தம்பி உடையாரின் மகன் சட்டத்தரணி சுப்பிரமணியம். இளம் சுப்பிரமணியம் தமிழை நன்கு கற்றவர். உறுதி எழுதவதற்கான தேர்விற்காகத் தமிழைக் கற்றவர். பின்னர் தமிழைக் கற்பதில் பேரின்பம் கண்டவர். நீதிமன்றம் செல்லாத நேரம் எல்லாம் தேசிய உடையிலே காட்சியளிப்பார். பேராசிரியர் வித்தியானந்தனின் தாயார் முத்தம்மா. இவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர். சமாதான நீதவானாக இருந்தவர் இவரின்

தந்தையார் சுப்பிரமணியம். இவரும் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்த பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

வித்தியானந்தன் சைவச் சூழலில் கல்வி கற்க வேண்டும் என்றபடியால் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் ஏடுதொடக்கப்பட்டது. பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் இளம் வித்தியானந்தன் கல்வி கற்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி ஆராய்ச்சிப் பணியையும் மேற்கொண்டார். பேராசிரியர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அவர்பெற்ற பட்டப்படிப்பைப் பற்றிக் கவனித்தல் மிகவும் முக்கியம். இங்கு மூவரின் தமிழ்க்கல்வித் தாக்கம் இளம் வித்தியானந்தனைக் கவர்ந்தது. இந்த மூவரின் தமிழ்ப்புலமை வித்தியானந்தனின் எதிர்காலத்தைச் சீராக்கியது. இவர்கள் மூவரும் பேராசிரியர்கள். அவர்களின் தமிழ்ப்பற்று, புலமை, ஆராய்ச்சித்திறன் என்பவை இளம் "வித்தி"யைக் கவர்ந்தன. பேராசிரியர் விபுலானந்தர் அடிகளார், பேராசிரியர் கலையருவி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம் ஆகியோர் இந்த மூவர். இலண்டன் பல்கலைக்கழகத்தில் இவருக்கு வழிகாட்டியாக அமைந்தவர் பேராசிரியர் அல்பிரட் மாசிற்றர், பேராசிரியர் பிலிப்சு, பேராசிரியர் பறோ. இதில் கலையருவி கணபதிப்பிள்ளையின் தாக்கமே பேராசிரியர் வித்தியின் வாழ்வில் பெரிய பங்கைப் பெறுகின்றது.

பேராசிரியர் வித்தியானந்தன், தான் பல்கலைக்கழகத்தில் கண்டு காதலித்த கமலாதேவி நாகலிங்கத்தைத் திருமணம் புரிந்தார். இந்தக் குடும்பத்தினரும் கலைப்பற்றும், சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நிரம்பியவர். பேராசிரியரின் கலை முயற்சிகள் யாவற்றிற்கும் கமலம் உறுதுணையாக அமைந்தவர். இவரின் அகால மறைவு பேராசிரியரைப் பெரிதும் பாதித்துவிட்டது.

இனிப் பேராசிரியர் வளர்த்த கல்விப் பரம்பரையை நோக்கலாம். இலங்கைப் பல்கலைக்கழகம் கல்லூரியாக இருந்தது. இது இலண்டன் பல்கலைக்கழகத்துடன் ஒரு காலத்தில் இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில் தமிழ் கற்கும் மாணவரின் தொகை குறைவு. அவர்களின் தமிழ் அறிவும் அப்படித்தான். அவர்களுக்குத் தமிழ் நெடுங்கணக்கைத் தெரிய வைத்துத் தமிழ் கற்பித்தவர் அழகசுந்தர தேசிகர் எனப் போற்றப்பட்ட வண. கிஞ்சுபரி அடிகளார். அவருக்குப் பக்கபலமாக இருந்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகம் தனித்தியங்கும் பல்கலைக்கழகமாக மாறியது ; மாறியதும் இலங்கை சுதந்திரம் பெற்றதும் தாய் மொழி கல்வியின் தரம் உயர்ந்தது. இதற்கு உதவியவர் விபுலானந்த

அடிகளும், பேராசிரியர் கணபதிப்பிள்ளையும், பேராசிரியர் செல்வநாயகமும். தமிழியல் ஆராய்ச்சிப் பரம்பரையைப் பெரிதும் ஊக்குவித்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. தமிழியல் ஆராய்ச்சியைத் தூண்டுவித்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. அப்போது தமிழியல் ஆராய்ச்சியை இலங்கை மாணவர் ஐரோப்பியப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டனர். இவர்களுக்குப் பெரிதும் உதவியவர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் பேராசிரியர் வித்தியானந்தனும். இந்தப் போக்கை மாற்றியமைத்து இலங்கையிலும் தமிழியல் ஆராய்ச்சியை மேற்கொள்ள வைத்த பெருமையில் பெரும்பகுதி பேராசிரியர் வித்தியானந்தனைச் சாரும். இன்று இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய உலகப் பல்கலைக்கழகங்களிலும் பணிபுரியும் பலரும் பேராசிரியர் வித்தியானந்தனின் மாணவர். இது பெருமைக்குரிய அலுவல்.

பேராசிரியர் வித்தியானந்தன் சைவத்தையும் தமிழையும் மிகவும் போற்றி வளர்த்த பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது. இவரின் குடும்பத்தினரே இன்றும் மாவிட்டபுரம் முருகன் கோயில் 16ஆம் திருவிழா உபயகாரர். ஆனால் பேராசிரியர் வித்தியானந்தன் பரந்த உளப்போக்கு உடையவர். இலங்கை இஸ்லாமியர் பற்றிய அகன்ற ஆழமான ஆராய்ச்சிப் பரம்பரையைப் பெரிதும் உருவாக்கியவர் பேராசிரியர். இஸ்லாமிய இயல் ஆராய்ச்சியாளர் இவர். இவர் எழுதிய "கலையும் பண்பும்" என்ற நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது என்பது குறிப்பிடவேண்டிய அலுவல். அது மட்டன்று. ஈழத்துத் தமிழியல் வளர்ச்சிக்குக் குறிப்பாகவும் தமிழியல் வளர்ச்சிக்குப் பொதுவாகவும் கிறித்தவர் ஆற்றிய தொண்டினைத் தானும் ஆராய்ந்தார். அத்துடன் பிறரையும் ஆராயும்படி தூண்டினார். இங்ஙனம் இஸ்லாமியத் தமிழியல், கிறித்தவர் தமிழியல் தமிழ் சிங்களக் கலைத் தொடரியல் பற்றித் தானும் ஆராய்ந்தார். பிறரையும் ஆராயும்படி செய்தார். இவை பேராசிரியர் தோற்றுவித்த கல்விப் பரம்பரையின் அணிகலன்.

பேராசிரியர் வித்தியானந்தன் அழியவிடாது காப்பாற்றிய கலைப்பரம்பரை ஒன்று இன்று இளமையுடன் பொலிவுற்று மறுமலர்ச்சி பெற்றுள்ளது. அதுதான் தமிழ் நாடக அண்ணாவியார் பரம்பரை. ஈழத்து அண்ணாவியார் பரம்பரை தன் பெருமையை உணரவிடாது தடுத்து வைத்தனர் ஒருசாரார். ஐரோப்பியக் கலை மோகம் தலைதூக்கி ஆடிய காலம் அது. அந்தக் காலத்தில் கூத்துக்கலையைக் காப்பாற்றி அதற்குப் புத்துயிர் அளித்தவர் வித்தியானந்தன். இவர் தோற்றுவித்த மறுமலர்ச்சி வலிவும் வனப்பும் பொலிவும் பெற்றுள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய அலுவல்.

பேராசிரியர் வித்தியானந்தன் போற்றி வளர்த்த ஆராய்ச்சிப் பரம்பரை மற்றொன்றையும் இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். அதுதான் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் . இந்த நிறுவனத்தை மலேசியாவில் தோற்றுவித்த பெருமை தமிழ் முனிவர் தனிநாயக அடிகளாரைச் சாரும் இந்நிறுவனம் வேர் ஊன்றி வளரப் பெரிதும் உதவியவர் பேராசிரியர் வித்தியானந்தன். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இந்த நிறுவனத்தின் ஆய்வரங்கு மாநாடு நடைபெறத் தனிநாயக அடிகளாருடன் நின்று அரும்பாடுபட்டவர் பேராசிரியர் வித்தியானந்தன். அது மட்டன்று இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக்கிளை செழித்துவளர உதவியவர் அதன் தலைவர் வித்தியானந்தன். ஏனைய நாடுகளிலும் பார்க்க இலங்கையே தன் கிளையின் மூலம் தமிழியல் வளர்ச்சிக்கு வழிகாட்டி நிற்கின்றது. இலங்கையில் நடைபெற்ற வவுனியா, மட்டக்களப்பு. முல்லைத்தீவுத் தமிழியல் ஆராய்ச்சி மாநாடுகள் இதற்குப் போதிய சான்றாக அமைந்துள்ளன. அடுத்தகிளை மாநாட்டை மலையகத்தில் நடத்தப் பேராசிரியர் திட்டமிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால் பேராசிரியர் வித்தியானந்தனார் நல்லதொரு பரம்பரையில் பிறந்தவர். நல்லதொரு பரம்பரையின் கல்வி வாரிசு. தனக்குப்பின் தமிழியலை வளர்க்கக்கூடிய நல்லதொரு வாரிசான பரம்பரையை உருவாக்கியவர். இந்தப் பரம்பரை தமிழியல் வளர்ச்சியைப் போற்றிப் பேணும் என்பதில் ஐயம் இல்லை.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்*

*மணிவிழா மலர்*

*கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் 1984*

## யாழ்ப்பாணத்து மாட்டுவண்டிச் சவாரி

யாழ்ப்பாணத்துப் பொதுமக்களின் முக்கியமான பொழுதுபோக்குகளில் ஒன்று மாட்டுச்சவாரி. இச் சவாரிப் போட்டியை பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து மகிழ்வர். இருந்தும் "உயர்ந்தோர்" எனத் தம்மைத் தாமே பெருமைப்படுத்துவோர் சிலர் "இது மாட்டுச் சவாரியோ? அல்லது இரட்டைச்சுழி மாட்டுச் சவாரியோ?" என சிலேடையாக கேட்டு மகிழ்வர். இங்கே பெறப்பட வேண்டியது ஒன்று உண்டு. தமிழ் நெடுங்கணக்கில் இரட்டைச்சுழி "ே" இது ஒரு கருத்து. "இரட்டைச்சுழி" என்பது மயிரில் இயல்பாக ஏற்படுகின்ற சுழி. மயிர் சுழித்து முளைக்கும் அங்க இயல்பு நிபுணரின் கருத்துப்படி ஒரு சுழி நல்லது ; இரண்டு சுழி கூடாது. மக்களின் தலையில் மட்டுமன்றி சில விலங்குகளின் முதுகிலும் இச்சுழிகள் காணப்படும். முதுகில் இரண்டு சுழி உள்ள மாட்டை "இரட்டைச்சுழியன்" என்பர். இது ஒரு கருத்து. "மாடு" என்னும் சொல்லின் முன் இரட்டைச் சுழியாம் "ே" எழுத்தைப் போட்டால் "மோடு" என்ற சொல் வரும். "மோடு" என்றால் புத்தியில்லாதவன், மூடன், மடையன் என்பன பொருள். "இரட்டைச்சுழி மாட்டுச்சவாரி" என்ற சொற்றொடரை கவனிக்கலாம். இதன் ஒரு பொருள் "முதுகில் இரண்டு சுழியை உடைய மாட்டுச்சவாரி" இதன் மற்றப் பொருள் மோடர் நடத்துகின்ற சவாரி. அதாவது "மோட்டுச் சவாரி".

இந்த மாட்டுச் சவாரியை விரும்பாத பெரியோர் பலர் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் ஒருவர். நாவலரின் எண்ணங்கள் எப்போதும் உயர்ந்தவை; மேன்மை உடையன ; சீரிய நோக்கு உடையவை. மத நம்பிக்கையில் எருது சிவபெருமானின் வாகனம். சிவன் இடபாரூடர். ஆகவே எருதை வண்டியில் பூட்டிச் சவாரி ஓட்டும் போது அதனை அடித்து ஊசியால் குத்தி, வாலை முறுக்கி கடித்து துன்புறுத்துவதை நாவலர் பெருமான் விரும்பவில்லை. நாவலர் வழிவந்த சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரமும்

இக்கருத்தையே கொண்டிருந்தார். இளமையில் சைவப்பெரியார் மாட்டுவண்டி ஒன்றை வைத்திருந்தார். மாட்டை அடிப்பதையோ, துன்பறுத்துவதையோ, அளவிற்கு மேலாக வேலை வாங்குவதையோ சைவப்பெரியார் விரும்புவதில்லை. பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை தன் எருதை மிகவும் கவனமாக வளர்ப்பார். வீட்டில் உலைக்குப்போட அரிசி இல்லை என்பதிலும் பார்க்க எருதிற்கு உணவில்லை என்பதிலேயே பாவலர் கூடக் கவலை கொள்வார். இப்பெரியார்கள் உயிர்மேல் காட்டிய இரக்கம் அத்துணைப் பெரியது. இங்கிலாந்து சீவகாருணிய சங்கத்தினர் குதிரைச் சவாரியை எதிர்ப்பர். காரணம் உண்டு. சவாரியின்போது சவுக்கடிக்கும் குத்தூசி வேதனைக்கும் குதிரை பலியாகும். மேலும் சவாரித் திடலில் விழுந்து நிரந்தரமாக முடமான குதிரையை அந்த இடத்திலேயே வைத்து துப்பாக்கியால் சுட்டு அழிப்பதும் அக்கால வழக்கம். இருந்தும் அரசருக்குரிய விளையாட்டாக மேலை நாட்டில் குதிரைச் சவாரி இருந்து வந்துள்ளது. இங்கிலாந்தை ஆண்ட மன்னர் பலர் நேரடியாகச் சவாரியை ஆதரித்து தம்முடைய குதிரைகளையும் ஓடவிட்டனர். உலகப் புகழ்பெற்றது இங்கிலாந்தில் உள்ள டார்பி என்னும் குதிரைப் பந்தய ஓட்டம் ; இது வெறும் ஓட்டம் மட்டுமன்று. இது தனிப்பெரும் சமுதாய விழா. இவ்விழாவில் சீமான்களும் சீமாட்டிகளும் கலந்து கொள்வர். இப்போட்டியில் மூன்று வயதுடைய குதிரைகள் மட்டுமே கலந்துகொள்ளும். வெற்றிபெற்ற குதிரையை பல ஆயிரம் பவுண்டு கொடுத்து வாங்குவர். இக்குதிரை பண்ணையில் வைத்து இன விருத்திக்காகப் பயன்படுத்தப்படும். குதிரை ஓட்டம் அங்கு ஒரு கலை மட்டுமல்ல ; அது ஒரு வணிகமும்தான். இங்கிலாந்து மன்னர் ஒருவர் இறக்கும் தருவாயில் இருந்தார். புலன்கள் அடங்கும்போதுகூட அவர் தன் கடவுளரையோ, மனைவி மக்களையோ கூப்பிடவில்லை. தன் பந்தயக் குதிரையின் பெயரை மட்டும் அடிக்கடி உச்சரித்தாராம். அந்த நிலைக்கு எமது நாட்டு மாட்டுச்சவாரி உயராதா? அழியப்போகும் இக் கலையை நவீனமயப்படுத்த இயலாதா?

## மாட்டுச் சவாரி வரலாறு ;

மாட்டுச் சவாரிக்கலை தோன்றிய வரலாற்றைக் கவனிக்கலாம். மாடு என்பது தமிழ்ச்சொல். சவாரி என்ற சொல் உருது மொழி வழியாக தமிழிற்கு வந்தசொல். சவாரி என்றால் “வண்டி முதலியவற்றில் செல்லுகை“ என்பது பொருள். இஸ்லாமியர் தமிழ் நாட்டிற்கு வரமுன்னர் மாட்டுச்சவாரி நடக்கவில்லை என்பது கருத்தன்று. மாட்டுப்போட்டி ஓட்டம் தமிழ்நாட்டில் பல காலம் இருந்து வந்துள்ளது. எருதை மையமாக வைத்து நடக்கும் பொங்கல் விழாக்கள் தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளன. மாடும் நாயும் தமிழ் மக்களின் நண்பர். “மாட்டு விழா” எடுப்பது தமிழ் நாட்டின் பண்பாட்டு மரபு. தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் நிகழ்வது மாட்டுப்பொங்கல். இப்பொழுது யந்திர கலப்பை வந்துவிட்டது. அந்தக்காலத்தில் மாடு இல்லாமல் கமத்தொழில் இல்லை ; போக்குவரத்து இல்லை ; செக்கு இழுப்பதும்

மாடுதான். பொங்கலைத் தவிர சல்லிக்கட்டு என்னும் வீரவிளையாட்டு இன்னும் தமிழ்நாட்டில் வழக்கிலுள்ளது. ஐரோப்பாவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள "எருதுடன் மோதுதல்" விளையாட்டில் எருது இறக்கும் ; அது கொல்லப்படும். உயிர் மீது அன்புடைய தமிழ் மக்கள் சல்லிக்கட்டு வீர விளையாட்டின்போது எருதைக் கொல்வதில்லை ; அதனை மடக்கிப் பிடிப்பர்.

இந்தச் சல்லிக்கட்டு வீரவிளையாட்டைப் பற்றி நோக்கலாம். இதனை மாடு பிடித்தல், எருது பிடித்தல், காளைப் போர் எனவும் தமிழ் மக்கள் கூறுவர். பண்டைக் காலத்தில் நிலவியது எருது தழுவுதல். இந்தச் சல்லிக்கட்டு வீரவிளையாட்டு தோன்றியது பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. முதலாவது தொன்மையாளர் தரும் கதை. சல்லி என்ற பெயருடைய யாதவகுல வீரன் ஒருவன் இருந்தான். மகா பாரதத்தில் சல்லியன் பெரும் வீரன் என்பது இங்கு கவனிக்க வேண்டியது. சல்லி என்ற வீரன் தோற்றுவித்த கலை சல்லிக்கட்டு காளை வீரவிளையாட்டு என்பர். சமுதாய அடிப்படையில் சல்லிக்கட்டை ஆராய்ந்தவரும் உளர். சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையம். சல்லிக்கட்டு விளையாட்டின்போது சல்லியுடன் பணமுடிப்பும் பவுணும் கட்டப்படும். யார் மாட்டை மடக்கிப் பிடித்துச் சல்லியை எடுக்கிறாரோ அவருக்கு காசும் பவுணும் உடைமையாகும். அத்துடன் கிராமத்து தலையாரியின் மகளை அல்லது மாட்டுச் சொந்தக்காரரின் மகளை திருமணம் செய்து வைப்பர். மாட்டை கைக் கயிற்றில் கட்டி மாட்டுடன் இளைஞர் ஓடுவர். இப்படிப் பலர் கிராமத்துப் புலத்தில் பந்தய ஓட்டத்தில் ஈடுபடுவர். இதில் வென்றவருக்கு தலையாரி பரிசு வழங்குவார். இப்படியான விளையாட்டை யாழ்ப்பாணத்தில் அரசரும், மணியகாரன், உடையார், விதானை போன்ற தலைமைக்காரரும் நடத்தினர் என்பர். பின்னர் மாட்டை வண்டியில் பூட்டி ஓடும் விளையாட்டு வந்தது. இரட்டை மாட்டுவண்டி ஓட்டம், ஒற்றை மாட்டுவண்டி ஓட்டம் என புறம்பாக ஓட்டம் நடைபெறும். சோடி மாட்டை யாழ்ப்பாணத்தவர் "ஓறணை" என்பர். இதன் செந்தமிழ் வடிவம் "ஓரிணை". இது ஓர் + இணை எனப் பிரியும். இணை என்றால் சோடி. இணைபிரியாத நண்பர் என்பது மரபுச் சொல்.

### மாட்டைப் பழக்குதல் :

யாழ்ப்பாணத்து மாட்டுச் சவாரிக் கலையை இனி ஆராயலாம். "சவாரி மாட்டைப் பழக்கி எடுத்தல் குழந்தைப் பிள்ளையை வளர்த்து எடுப்பது போன்றது" என்பர் சவாரி மாட்டுப் பழக்குனர். இந்தச் சவாரிக் கலையை பிரித்து நோக்கலாம். முதலாவது கட்டம் கன்றைத் தெரிவு செய்தல். இரண்டாவது கட்டம் கன்றைத் தேற்றுதல் அல்லது கொழுக்கச் செய்தல். மூன்றாவது கட்டம் மூக்கணாங் கயிற்றை இடுதல். அதாவது நாணயக் கயிறு குத்துதல். நான்காவது கட்டம் நாம்பனுக்கு ஏர் வைத்தல். இது பெரும்பாலும் நல்ல நாளில் நடக்கும். இதற்கெனப் பஞ்சாங்கங்களில்

நாள் குறிக்கப்பட்டிருக்கும். ஐந்தாவது கட்டம் நாம்பனுக்கு ஆண்மை நீக்கம், குறி சுடுதல் என்பன. ஆறாவது கட்டம் கைக் கயிற்றில் நடத்துதல். இதுவரையில் வயலில், கமத்தில், வீட்டில், புலத்தில் நடத்திப் பழக்கப்பட்ட நாம்பன் தெருவுகளில் நடத்தப்படும். அதாவது மக்கள் கூட்டம், வண்டிப் போக்குவரத்து என்பவற்றைக் கண்டு வெருளாமல் இருக்கவே இந்தப் பயிற்சி நடைபெறும். ஏழாவது கட்டத்தில் "கடைக் கிட்டி பிடித்து" வண்டியில் மாடு பூட்டப்படும். வண்டி நுகத்தில் நுனியில் ஒருவர் பிடிப்பார். இவரின் வழிகாட்டலில் மாடு வெருளாமல் நேராகச் செல்லப் பழகும். வண்டி விடுபவர் நாணயக் கயிறு மூலம் விடுக்கும் கட்டுப்பாட்டையும், குரல் மூலம் உணர்த்தும் கட்டளைகளையும் துவரந்தடி அடி மூலம் வழங்கும் தண்டனை களையும் மாடு ஏற்கப் பழகும். எட்டாவது கட்டத்தில் மாடு சவாரிக்குத் தயாராகும். இந்த எட்டுக் கட்டங்களையும் ஒரு மாடு தாண்டப் பல மாதமாகும்.

ஒருவர் தன் பசுவின் கன்றை ஏர் வைத்து வயலில் உழவு பழக்குவித்தார். நாம்பன் மிக விரைவாக கள்ளம் இன்றிச் சென்றது. இதனால் களிப்புற்ற அவரின் புலன் எல்லாம் மாட்டின் மீது சென்றன. அவ்வழியால் வழிப்போக்கர் ஒருவர் வந்தார். "கடம்பூருக்கு வழி எது?" என்றார் வழிப்போக்கர். மாட்டிலே கவனம் செலுத்தியவர் "இடம்பூணி என்னாவின் எருது" என்றார். அதாவது இடது பக்கத்தில் பூட்டப்பட்ட நல்ல எருது என் மாட்டின் கன்று என்பது பொருள். தன் மாட்டின் பெருமையில் மயங்கி இருந்தவர் காதினிலே "கடம்பூருக்கு வழி எது?" என்ற வினா "இடம்பூணி யார் எருது?" என்பது போன்று ஒலித்தது போலும். சவாரி மாட்டினாலே பெருமையடைந்த செல்வந்தர், சொந்தக்காரர் பலர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தனர் ; இன்னும் வசித்து வருகின்றனர்.

சவாரிக்குச் சரியான மாட்டைத் தெரிந்தெடுத்தலில் நிபுணர் பலரும் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர். சவாரி மாட்டை இரண்டு பிரிவாகப் பிரிப்பர். அவையாவன "நாட்டான்", "வன்னியான்" என்பன. நாட்டான் என்பது யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த மாடு. வன்னியான் என்பது முல்லைத்தீவு தொடக்கம் மன்னார் மாதோட்டம் வரை உள்ள வன்னிப்பகுதியில் பிறந்து வளர்ந்த மாடு. யாழ்ப்பாணத்து தோட்டங்களில் பிறந்த மாடு "நாட்டான்" சிறு கன்றாக இருக்கும் போது இது துள்ளுவது நடப்பது போன்றவற்றைக் கவனிப்பர். கால், வால், தலை அமைப்பு போன்ற அங்கலட்சணவியல் மரபு வழியாக வருவது. இதற்கேற்ப கன்றைத் தெரிவு செய்து அதற்கு நிறைப் பால் கொடுத்து வளர்ப்பர். இளம் வயதிலே அதற்கு தேன்புல், முள்ளுமுருக்கம் இலை போன்ற உணவு ஊட்டப்படும். பனை அடைப்புகளில் இச்சவாரிக்கன்று துள்ளி விளையாட விடப்படும். அப்போதுதான் அதன் உடல் குறிப்பாக கால்கள் வலிமை பெறும். வன்னியான் கன்றுக்கு இப்படியான வளர்ப்பு முறை தேவையில்லை. அது போதியளவு தாய்ப்பாலைக் குடித்து புல்லை

மேயும். தாயுடனும் பட்டியுடனும் சேர்ந்து வளரும். நரி, புலி போன்ற காட்டு மிருகங்களின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் ஓடித்தப்பப் பழகிக் கொள்ளும். எனவே இது இயல்பாக உடல் உறுதி பெற்றுவிடும். வன்னியான் கட்டாக்காலி மாடு. ஒரு வயதானதும் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்ற மாட்டு வியாபாரிகள் இவற்றை வாங்கி கந்துவானாக பூட்டி கால்நடையாக யாழ்ப்பாணம் கொண்டுவந்து விற்பர்.

இரண்டாவது கட்டம் கன்றைத் தேற்றுதலுடன் தொடங்கும். தாய்ப்பாலை மறந்த கன்றிற்கு கறியுப்பு, தவிடு, எள்ளுப்புண்ணாக்கு, சுண்ணாம்புத் தண்ணீர், பச்சையரிசி, பனை வெல்லம் போன்ற சத்துணவு வழங்கப்படும். குடற்புழு நோய் ஏற்படா வண்ணம் இடையிடையே வேப்பம் நெய்யும் பருக்கப்படும். மாடு நல்லாக வளர்வதை நன்றாகப் பார்த்தவர் “கண்ணுக்குள் வைத்திடுவர்” அதாவது கண்ணூறு அல்லது “நாவீறு பார்த்தல்” இதனைப் போக்கப் பார்வை பார்த்தல், மந்திரம் ஓதப்பட்ட தண்ணீர் வைத்தல் போன்றவைகளும் இடம் பெறும். இதற்கென கிராமங்களில் மாட்டுப் பரிகாரிமார் இருக்கின்றனர். இங்ஙனம் மாட்டைத் தேற்றுவதும் ஒரு தனிக் கலை.

மூன்றாவது கட்டம் மாட்டிற்கு நாணயக் கயிறு குற்றுதலுடன் தொடங்கும். மாட்டுக்கு மூக்குக்குத்தி நாணயக்கயிறு இடுதல் நல்ல நாளில் இடம்பெறும். இதற்கென தனிப்பயிற்சி பெற்றவர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர். தைப்பூசம் போன்ற நாள்கள் தெரிந்து எடுக்கப்படும். இலையான் மாதங்கள் தவிர்க்கப்படும். குத்துப்புண்ணில் இலையான் மொய்த்தால் புண் பெருத்துவிடும் என்பதே காரணம். மூக்கணாங்கயிறு இட்ட நோ, எரிச்சலினால் கன்று சில நாட்களுக்கு உணவு அருந்தாமல் இருக்கும் ; கூச்சப்படும். எனவே அப்போது வளர்ப்பவர் பெரும் கவனம் செலுத்துவர்.

நான்காவது கட்டம் கைக் கயிற்று நடை தொடங்கும். கைக் கயிற்றிலே நாம்பனை நடத்திப் பழக்குவர். நடத்துபவர் நாணயக் கயிறு மூலம் விடுக்கும் கட்டளைக்கு நாம்பன் கீழ்ப்படிந்து நடக்கப் பழகும். கயிறு மூலம் நாம்பன் பயிற்சிபெறும். கயிற்றை சுண்டப் பிடித்தல், தளர்த்துதல் போன்றவை இவற்றில் சில. அத்துடன் இப்படிப் பயிற்றுபவர் ஒலிக் குறிப்புகளை எழுப்புவர். இந்தக் கட்டத்தில் நாம்பனுக்கு ஏர் வைக்கும் பயிற்சி நடக்கும். ஏர் வைக்கும் போது நாம்பன் எப்படி நடந்துகொள்ளுகின்றது என்பது முக்கியம். வெருளுதல், குறுக்கே அள்ளுதல் - அதாவது குறுக்கே இழுத்தல் - விழுந்து படுத்தல் போன்ற பிழைகளைச் செய்யாமல், நேராக விறுக்காக “அட்டகாசம்” செய்து போகின்ற நாம்பன் சவாரிக்கு உகந்தது

என்பன கவனிக்கப்படும். ஏர் வைத்தல் பெரும்பாலும் தோட்ட உழவு, வயல் உழவு என்பவற்றுடன் நின்றுவிடும்.

ஐந்தாவது கட்டம் ஆண்மை நீக்கம், குறி சுடுதல் ஆகியவற்றுடன் தொடங்கும். ஆண்மை நீக்கம் செய்தால் மாடு கொழுக்கும் என்பது பொதுமக்களின் நம்பிக்கை. அத்துடன் மாட்டின் கீழ்ப்படிவு உணர்ச்சியும் கூடிவிடும் என்பர். குறிசுடுதல் முக்கியம். குறிசுடப்பட்ட மாட்டிற்கு வலி போன்ற நோய் வராது. அத்துடன் குறி சுட்டால் அழகாக இருக்கும் என்பது மற்றும் ஒரு நம்பிக்கை. குறி சுட்ட மாட்டின் நோவைப் போக்கப் பனங்கள்ளுப் பருக்குதல், வாழைப்பழம் கொடுத்தல், சர்க்கரை கலந்த தவிடு வைத்தல் போன்ற உணவு வகைகளும் வழங்கப்படும்.

இதுவரையும் வயலில் தோட்டத்தில் நின்ற நாம்பன் ஒழுங்கை, தெரு போன்ற சன நடமாட்டம் உள்ள இடங்களில் கைக் கயிற்றில் நடத்தப்படும். இது ஆறாவது கட்டம். சனக்கூட்டம், ஏனைய வாகனப் போக்குவரத்து ஆகியவற்றைக் கண்டு மாடு "வெருண்டடியாமல்" நடக்கப்பழகும். "கடும் வெருட்சி உள்ள நாம்பன்" சவாரிக்கு உதவாது. இங்ஙனம் வெருட்சி உணர்வு தெளிந்த மாட்டை மேலும் கொழுக்கச் செய்வர்.

ஏழாவது கட்டத்தில் மாடு வண்டியில் பூட்டப்படும். இப்படி பூட்டப்பட்ட மாடுகளின் நுகத்தில் இரண்டுபேர் இரண்டு நுனியிலும் பிடித்துக்கொண்டு நடத்துவர். இதனை "கடைக்கிட்டி ஓட்டம்" என்பர். வண்டி நுகத்தில் மாட்டின் கழுத்து வைக்கும் இடத்தில் இரண்டு பனந்தடிகள் இருக்கும். உட்பக்கமாக இருப்பது உட்கிட்டி ; வெளிப் பக்கமாக இருப்பது கடைக்கிட்டி. கடைக்கிட்டியை பிடித்துக்கொண்டு நடப்பவர் இளைஞர். மாட்டின் வேகம், இழுவை, துள்ளல், வெருளல், குறுக்கே இழுத்தல் போன்றவற்றிற்கெல்லாம் ஈடுகொடுத்து மாட்டை வழிநடத்துவது பெரும் பொறுப்பான அலுவல். அத்துடன் வண்டி ஆசனத்தில் இருந்து வண்டியைச் செலுத்துபவரும் கடைக்கிட்டி பிடிப்பவரும் நன்கு ஒத்துழைக்க வேண்டும். பெரும்பாலும் புது மாடுகள் சந்தை போன்ற சனம் நிறைந்த இடங்களுக்கு பூட்டிச் செல்லப்படும்.

இதே கட்டத்தில் சோடி சேர்த்தல் நடைபெறும். ஒற்றை மாட்டு வண்டிச் சவாரி, இரட்டை மாட்டு வண்டிச் சவாரி என்பன புறம்பாக நடைபெறும். இரட்டை மாட்டு வண்டிச் சவாரியே முக்கியமான இடத்தைப் பெறும். மாடுகளைச் சோடி சேர்த்தல் முக்கியம். இரண்டு மாடுகளும் ஒன்றையொன்று புரிந்து நடக்கப் பழகும். சில்லறை நடை, ஓடுதல், நாலுகால் பாய்ச்சல் என்பவற்றில் சோடி - அல்லது ஓர் இணை - நன்கு பயிற்சிபெறும். இப்படி இரண்டு மாடுகளும் ஒன்றையொன்று விளங்கிக் கொண்டு சவாரி செய்வதுதான் தனிச்சிறப்பு. சோடி ஒத்துழைக்காவிட்டால் சவாரியில்

வெற்றிபெற முடியாது. மேலும் சோடியை ஒன்றாகக் கட்டிப் பழக்குவர். சோடி ஒன்றையொன்று இடிக்காமல், முட்டாமல் இருப்பது முக்கியம். இப்படி நெருங்கிப் பழகிய சோடி தொட்டிலில் நிற்கும் போது ஒன்றையொன்று நக்கிக் கொடுக்கும். சவாரி விடுபவா இரண்டு மாட்டையும் தட்டித் துடைத்து அன்புடன் பழகுவர். அத்துடன் மாட்டுடன் கதைத்துப் பழகுவர். "வாடா", "திரும்படா", "இஞ்சாய்" என்றெல்லாம் பேசுவார். "இங்கேபார்", "வா இங்கே" என்பன செந்தமிழ் வடிவம். இவை மாடு வளர்ப்போரின் வாயில் "இஞ்சாய்", "வாஞ்சை" எனத் திரிந்து வழங்கும். சவாரி இரண்டு பிரிவாக நடைபெறும். ஒன்று கன்றுகளுக்கு உரியது - அதாவது கனிட்ட பிரிவு ; மற்றது பெரிய மாடுகளுக்குரிய பிரிவு - அதாவது சிரேட்ட பிரிவு.

சவாரி மாடுகளின் பெயர் ; மாட்டு இலட்சணம், நிறம், சொந்தக்காரரின் பெயர் ஆகியவற்றைக் கொண்டு இடப்படும். மாட்டு இலட்சணம் பற்றி எழுந்தவை சில:- கிடாய்க்கொம்பன், விரி கொம்பன், ஏரியன், குதிரைவாலன். நிறத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை:- வெள்ளையன், பெரிய மாவெள்ளை, செங்காரி, கறுவல், பூச்சியன், சுட்டியன். மாட்டின் குணம் பற்றியும் பெயர் வைப்பதும் உண்டு :- இடியன் கறுவல், கள்ளக் கறுவல். மாட்டின் சொந்தக்காரரின் பெயர் கொண்டு எழுந்த பெயர் :- மாப்பாணஞ்சோடி, கதிரவேல் சோடி, ஐயற்றை சோடி.

பழக்கப்பட்ட மாடு முதல் முதலாக சவாரிக்கு விடப்படும். இதனை முதலோட்டம், வெள்ளோட்டம், கன்னி ஓட்டம் என்பர். முதல் ஓட்டத்திலேயே வெற்றி பெற்ற மாட்டுச் சோடியின் விலை உயரும். அடுத்தடுத்து வெற்றிபெற்ற சோடியின் விலை மேலும் கூடும். சவாரி மாட்டைப் பழக்கி விற்பவர் பலரும் இருந்தனர். இவர் இதில் தனி இன்பம் பெறுவர். அத்துடன் இலாபமும் பெறுவர். சவாரியைத் தொழிலாகப் பொழுது போக்காகக் கொண்ட பலர் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். எனவே இவரை சவாரித் தம்பர், சவாரிச்சுப்பர், சவாரிக் கந்தர், சவாரித் இலகர் என்பர் பொதுமக்கள்.

சவாரி மாட்டைப் பராமரித்தல் ஒரு தனிக்கலை ; அதற்கு உணவு ஊட்டுதல், தட்டிக் கொடுத்தல், கால் பிடித்தல் எல்லாம் தனிக்கலை. "மாட்டின் வெற்றி அதன் உணவில்" என்பர். பனம் ஓலை வைத்தால் மாட்டின் கால் உழைவைக் கூட்டும் என்பது நம்பிக்கை. அரிசி, கடலை, கொம்புப் பயறு, உழுந்து, சிவப்புத் தவிடு, எள்ளுப் பிண்ணாக்கு என்பன முக்கியமான உணவு. சவாரிக்கு முதல் நாள் எல்லாம் மாட்டின் ஏரியைத் தட்டி, உடலை உருவி, காலைத் தடவிவிடுவார்கள். சவாரி முடிந்ததும் துணியைச் சுடுநீரில் நனைத்து "ஒத்தனம்" பிடிப்பர். பச்சைத் தேங்காய் மட்டையைச் சூடாக்கி உருவிவிடுவர். சவாரியின்போது மாடு பட்ட அடிகாயத்தை ஆறவைக்க வேப்பநெய், இருப்பைநெய், தேங்காய் நெய், கற்பூரம் என்பவற்றைக்

காய்ச்சிப் பூசுவர். துவரந்தடி அடிகாயம், குத்தூசிக் காயம் என்பவற்றிற்குச் சிறப்பான கவனஞ் செலுத்தப்படும்.

ஒவ்வொரு கிராமத்திலும் மாட்டுச்சவாரி ஒட்டத்திடல் இருக்கும். கீரிமலை வீதி இறக்கம், அளவெட்டி வீதி, ஈவினை வெளி, கூத்தியவத்தை வெளி என்பன புகழ்பெற்ற போட்டி நிலையங்களுட் சில. யாழ்ப்பாணத்துக் கமக்காரர் மட்டும் சவாரியில் ஆர்வம் உடையவர்களெனக் கொள்தல் பொருந்தாது. கோப்பாய் அதிகாரம் நாகநாதன், தமிழரசுத் தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம். சட்டத்தரணி "ஐயக்கோன்" செல்லத்துரை போன்றவர் இக்கலையில் பெரும் ஈடுபாடுடையவர். இக்கலையை நவீனமயப்படுத்தி விதிமுறைகளை ஏற்படுத்தவேண்டும் என்பதில் பலரும் ஆர்வம் காட்டி வந்தனர். எல்லோருடைய பெயரையும் இங்கு குறிப்பிட இயலாது எனினும் அரசாங்க அலுவலராகக் கடமை புரிந்த "இலங்கையர்கோன்" சிவஞானசுந்தரம், "சவாரி" செல்வரத்தினம். அரசாங்க மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் இ. இளையதம்பி போன்றோர் அவருட்சிலர்.

சவாரி வண்டி செய்வது தனிப் பெருங்கலை ; இதிலே போதிய தேர்ச்சி பெற்ற வல்லுநர் பலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றனர். வண்டிக்குரிய "அளவுக் கணக்குப் பிரமாணம்" என்பவற்றில் இவர் கைதேர்ந்தவர். இக்கலை பரம்பரையாக இருந்து வருகின்றது. வண்டி செய்வதில் புகழ்பெற்ற ஒருவர் "வண்டில்" செல்லப்பா ஆசாரி என்ற பெயரைப் பெற்றிருந்தார். வண்டி அதிகம் பாரமாக இருக்கப்படாது அத்துடன் அது உறுதியாகவும், பெலமாகவும் இருக்க வேண்டும். வண்டிச் சிலைகம்பு பூவரசு மரத்தினால் செய்யப்படும். வண்டித்துலா "கமுகுப்" பனையினால் செய்யப்படும். கமுகுப்பனை என்பது காரணப்பெயர். கமுகு என்பது பாக்குமரம். பாக்குமரம்போல மெல்லிதாக உறுதியாக வளர்ந்த பனையே கமுகுப்பனை, நுகம் மஞ்சள் நுணாவினால் ஆனது. இது வைரம் நிரம்பிய மரம். அதேநேரம் பாரம் குறைந்தது. இதுபற்றிப் புறம்பாக ஆராயவேண்டும்.

### மாட்டுச் சவாரியின் எதிர்காலத் திட்டம் :

கிராமத்து மட்டத்தில் இருந்துவந்த இக்கலைக்கு உயர்நிலையை அளித்தது யாழ்ப்பாணத்தில் "தினகரன்" நாள் ஏடு நடத்திய போட்டி. இப்போட்டியின் பயனாக இக்கலை நாட்டில் பெரும் மதிப்பை பெற்றது. இதுவரைகாலமும் இப்போட்டியின் விதி வாய்ச் சொல்லாகவே இருந்து வந்தன. இப்போட்டியின் பயனாகப் போட்டி விதிகள் யாவும் நிரை செய்யப்பட்டன. அறுபதுகளில் நடந்த இப்போட்டிகள் இக்கலையின் நிலையை உயர்த்தின. இதுபற்றிப் புறம்பான ஆராய்ச்சி தேவை. "ஈழநாடு" நாள் ஏடு நடத்திய போட்டிகள் மிகவும் சிறப்பாக நடந்தன.

"தினகரன்", "ஈழநாடு" நாள் ஏடு நடத்திய போட்டி மாட்டுச் சவாரியைத் தேசிய விளையாட்டு நிலைக்கு உயர்த்தியது என்றால், 1974இல் நடந்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இக்கலையை அனைத்து உலக நிலைக்கு உயர்த்தியது. இதுவரை காலமும் யாழ்ப்பாணத்து மக்கள் பார்த்துச் சுவைத்த இப்போட்டியை வெளிநாடுகளில் இருந்து வந்த பார்வையாளர் பார்த்துப் பாராட்டினர் ; கைதட்டி மகிழ்ந்தனர். தமிழ் நாட்டில் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் நடந்த அனைத்துலகத் தமிழ் மகாநாடுகளின்போது சல்லிக்கட்டு காளை விளையாட்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது. அதேபோன்ற பாராட்டு யாழ்ப்பாணத்து சவாரிக்கும் கிடைத்தது. "வீரபாண்டிய கட்டப்பொம்மன்" திரைப்படம் வெற்றிப் படம். இதில் சல்லிக்கட்டு காளைப்போட்டி இடம்பெற்றது. இந்த நிகழ்வை ஒட்டி இலங்கையில் தயாரித்த "பாசநிலா" என்னும் திரைப்படத்தில் யாழ்ப்பாணத்து மாட்டுச் சவாரி இடம்பெற்றது. இப்போட்டி மேலும் வளர்வதற்குரிய முக்கியமான திட்டங்கள் பற்றி இனிக் கவனிக்கலாம்.

(1) இப்போட்டியை ஆண்டுதோறும் நடத்துவதற்கு ஒரு கழகம் தேவை. உதைபந்தாட்டச் சங்கம் போன்ற ஒரு கழகம் தேவை. இதுவரை காலமும் வழக்கில் இருந்துவந்த விதிகள் எழுத்து வடிவம் பெறவேண்டும். இதற்குரிய பதிவேடுகள் யாவும் நன்கு பேணப்படல் வேண்டும். கிராம மட்டம், மாவட்டம், அனைத்து இலங்கை மட்டம் எனப் போட்டிகள் நடைபெற வேண்டும்.

(2) போட்டிகள் நடைபெறுவதற்குத் தேசியத் திடல் ஒன்று தேவை. ஐம்பதுகளுக்கு முன்னர் இப்போட்டிகள் பெரும்பாலும் மக்கிக்கல் வீதிகளில் நடைபெற்றன. இந்த வீதிகளை அரசாங்கத் திணைக்களம் பொறுப்பேற்று நடத்தியது. ஆனால் கனத்த வாகனப் போக்குவரத்து அதிகரிக்கவே அரசாங்கத் திணைக்களம் வீதிகளுக்கு தார் ஊற்றிக் கெட்டிப்படுத்தியது. இப்படி தார் ஊற்றப்பட்ட வீதிகள் சவாரிக்கு ஏற்றன அல்ல ; மாவிட்டபுரம், அளவெட்டி, உரும்பிராய் போன்ற இடங்களில் ஒதுக்கப்பட்ட மக்கிக்கல் வீதிகள் தார் வீதியாக மாறின. இது சவாரிப் பிரியருக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

(3) தார் வீதிகளைக் கைவிட்டு, சவாரிப்பிரியர் புலம், புற்றரை என்பவற்றை நாடினர். கூத்தியவத்தைவெளி, கருகம்பானை வெளி போன்ற இடங்களையும், புற்றரைகளையும் தேர்ந்தெடுத்துச் சவாரிப்பிரியர் சவாரிஸ்ய நடாத்தினர். ஆனால் நடுவண் ஆட்சியாளரோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களோ சவாரித்திடலை அமைத்துக்கொடுக்க முன்வரவில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள முடிக்குரிய காணிகளில் சிலவற்றில் சவாரிக்குரிய புற்றரையை அமைத்துக்கொடுக்க நடுவண் அரசும் உள்ளூராட்சி மன்றங்களும் முன்வரவேண்டும். இதற்குரிய நிதியை ஒதுக்குதல் முக்கியம்.

(4) போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குரிய கிண்ணம், கேடயம், பரிசு என்பவற்றை இதுவரை காலமும் வணிக நிறுவனங்களும் அவ்வப்போது அளித்து வருகின்றன. இத மகிழ்ச்சிக்குரிய அலுவல். கிண்ணங்களுடன், தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் என்பனவும் வழங்கப்படுதல் முக்கியம்.

(5) மேலே கூறியவை முக்கியமான யோசனை. இதுபற்றி ஆராய்ந்து ஐந்து ஆண்டுக்குரிய அபிவிருத்தித்திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த ஆணைக்குழு ஒன்று தேவை.

(6) இது பொதுமக்கள் யுகம். மக்கள் ஊடகங்களின் உதவி இல்லாமல் எதனையும் செய்ய முடியாது. எனவே ஒளிபரப்பு, ஒலிபரப்பு, நாள் இதழ் போன்ற நிறுவனங்கள் இக்கலையை வளர்க்க முன்வரவேண்டும். இதற்கு அரசமட்ட ஒத்துழைப்புத் தேவை.

(7) அனைத்துலகச் சுற்றுலாப் பயணிகள் பலர் ஈழத்தின் வடபகுதிக்கு வருவதில்லை. காரணம் கேட்டால் “வடபகுதியில் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை” என அரச அதிகாரிகள் காரணமும் தருகின்றார்கள். வெளிநாட்டுப் பயணிகளை வடபகுதிக்கு வரச்செய்யக்கூடிய வகையில் சவாரிப்போட்டி, கலைவிழா என்பவற்றை நடத்தலாம்.

இனி வருகின்ற பட்டியலில் இடம்பெறும் பெயர்களைப் பலரின் உதவியோடு தயாரித்துள்ளேன். இது முழுமையான பட்டியல் அன்று. இதனை நிரைசெய்யப் பலரும் உதவினர். அவர்களுக்கு என் உளப்பூர்வமான நன்றி. இனிவரப்போகின்ற இளம் ஆய்வாளரின் வழிகாட்டியாக இப்பட்டியல் அமையவேண்டும் என்பது என் பேரவா. யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் தோறும் சென்று ஆய்வாளர் விபரங்களைச் சேகரிக்க வேண்டும். இதற்கு ஏதாவது தேசிய நிறுவனம் முன்வந்தால் நன்று. தனித்து நின்று இப்பணியினைச் செய்ய இயலாது. இப்பதிப்பிற்கு நல்ல வரவேற்பு இருந்தால் திருத்திய இரண்டாவது பதிப்பினை வெளியிடலாம் ; எனவே இந்த ஏட்டை வாசிக்கும் அன்பர்கள் இன்னும் இடம்பெறவேண்டிய பெயர்களைச் சேகரித்து அனுப்பினால் பெரும் உதவியாக இருக்கும் ; எனவே அன்பர்கள் நிறைவுகளை உள்ளத்தில் வைத்தல் வேண்டும். அத்துடன் குறைகளைப் போக்கவேண்டிய உதவி வழங்குதல் முக்கியம்.

**சவாரியை பேணி வளர்த்தவர் :-**

சட்டத்தரணி செல்லத்துரை “ஜயக்கோன்” - உடுவில்

## மாட்டுச்சவாரியை ஊக்குவித்த பெரியோர்கள் சிலர்

**மறைந்த தலைமுறையினர் :**

திரு. அதிகாரம் நாகநாதர் (கோப்பாய்), திரு. சேர். இரத்தினசோதி சரவணமுத்து (கொழும்பு மாநகர முதல்வர்), திரு. பி.எஸ். சுப்பிரமணியம் (இளைப்பாறிய வைத்திய அதிகாரி), திரு. பி. சரவணமுத்து (இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர்), திரு. சா. ஜே. வ. செல்வநாயகம் (காங்கேசன்துறை பா.உ). திரு. கலையரசு கே. சொர்ணலிங்கம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (யாழ்ப்பாணம் பா.உ), திரு. சு. நடேசபிள்ளை (காங்கேசன்துறை பா.உ), திரு. கு. வன்னியசிங்கம் (கோப்பாய் பா.உ), திரு. மு. பாலசுந்தரம் (கோப்பாய் பா.உ), திரு. ஏ. எஸ். தம்பிஜயா (ஊர்வாகவற்றுறை பா.உ), திரு. அல்பிரட் துரையப்பா (யாழ்ப்பாணம் பா.உ), திரு. சு. கதிரவேற்பிள்ளை (கோப்பாய் பா.உ), திரு. வி. தர்மலிங்கம் (மானிப்பாய் பா.உ), திரு. மு. ஆலாலசுந்தரம் (கோப்பாய் பா.உ), வைத்தியர் இ. மு. வி. நாகநாதன் (நல்லூர் பா.உ), சட்டத்தரணி சி. சுப்பிரமணியம் (வீமன்காமம்), வைத்தியர் ஜெ. துரைசிங்கம்.

**அரசாங்க அலுவலர் :**

"இலங்கையர்கோன்" செ. சிவஞானசுந்தரம், திரு. வெசிலி செல்வரத்தினம் (அரசாங்க உதவி அதிபர்), திரு. மு. முருகேசபிள்ளை (உதவி அரசாங்க அதிபர்)

**இப்போதைய தலைமுறையினர் :**

மாண்புமிகு அமைச்சர் சௌ. தொண்டமான், மாண்புமிகு ஜனாப் எம். எச். முகமட், திரு. அ. அமிர்தலிங்கம் (முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவர்), திரு. கே. துரைரத்தினம் (முன்னைநாள் பா.உ, பருத்தித்துறை), திரு. வி. என். நவரத்தினம் (முன்னைநாள் பா.உ, சாவகச்சேரி), திரு. க.பொ. இரத்தினம் (முன்னைநாள் பா.உ, ஊர்காவற்றுறை), திரு. வெ. யோகேஸ்வரன் (முன்னைநாள் பா. உ, யாழப்பாணம்), திரு. மு. சிவசிதம்பரம் (முன்னைநாள் பா.உ, நல்லூர்), திரு. க. கனகராசா (அதிபர், மில்க்வைற் தொழிலகம்).

**அரசாங்க அலுவலர் :**

திரு. இ. சுந்தரலிங்கம் (இளைப்பாறிய பிரதிமா காவல்துறை தலைவர்). திரு. வி. கே. சிவஞானம் (யாழ் மாநகர ஆணையாளர்), திரு. வி. குமார், திரு. வி. சிவஞானம்.

**தினகரன் போட்டி அமைப்பாளர் :**

திரு. ஆர். சிவகுருநாதன் (பிரதம ஆசிரியர், தினகரன்), திரு. அ. பிரகாசம் (தினகரன் வடபிராந்திய முகாமையாளர்), திரு. அ. இரத்தினம் (தினகரன் உதவி ஆசிரியர்). திரு. எசு. சிவஞானம் (தினகரன் பிரதிநிதி, யாழ்ப்பாணம்).

**போட்டி அமைப்பாளர் :**

திரு. இ. இளையதம்பி

**அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் போட்டி**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பேராசிரியர் சு. வித்தியானந்தன் |
| செயலாளர் | : | சே. தனிநாயக அடிகளார் |
| அமைப்பாளர் | : | வி. எச். துரைராசா |

**சவாரியில் பங்குபற்றிய மூத்த தலைமுறையினர் சிலர்**

திருவாளர்கள்

அளவெட்டி பூதப்பிள்ளை, இளவாலை ஆ. சூசைப்பிள்ளை, இளவாலை தம்பிப்பிள்ளை, உடுவில் சி. இலகுப்பிள்ளை, உடுவில் ச. சின்னத்தம்பி, உசன் இரத்தினசபாபதி, உரும்பிராய் சின்னையா, ஊரெழு ஐயர், ஊர்காவற்றுறை ஜேம்சு, எழுதுமட்டுவாள் ச. துரைசிங்கம், ஏழாலை கனகர், கந்தரோடை அ. கனகர், சுன்னாகம் ஆசையர் தம்பர், சுன்னாகம் கே. தம்பையா, சுன்னாகம் ந. சீனியர், சுன்னாகம் ச. தம்பிப்பிள்ளை, சுன்னாகம் ம. சின்னத்தம்பி, சுன்னாகம் சீ. சின்னத்துரை, சுன்னாகம் சி. மண்டலம், சிறுப்பிட்டி தம்பையா, சரசாலை காங்கேயர், சரசாலை "இராசா" இராசக்கோன், சரசாலை ஞானி ஞானமுத்து, புத்தூர் மார்க்கண்டு, புத்தூர் த. கிட்டினர், புன்னாலைக்கட்டுவன் செல்லப்பா (இலண்டன்), போயிட்டி கு. நாகமணி, தம்பளை க. பொன்னையா, உடுவில் அரியகுட்டி, கொல்லங்கலட்டி "சாமி" சின்னத்தம்பி, கைதடி காசிப்பிள்ளை, கந்தரோடை சபாபதி, மாவிட்டபுரம் வி. மாப்பாணர், மாவிட்டபுரம் க. தம்பையா, மாவிட்டபுரம் க. கந்தவனம், மாவிட்டபுரம் சி. வைரவி, மாவிட்டபுரம் மூ. கதிரவேலு, மாவிட்டபுரம் வ. செல்லையா, மயிலிட்டி "அராவாள்" சின்னத்தம்பி, மயிலிட்டி கந்தப்பிள்ளை, மயிலிட்டி சி. பழனி, மல்லாகம் அருணாசலம் (அருணி), மாதகல் பழனி, தம்மளை க. பொன்னையா, தம்மளை க. கந்தையா, கல்வியங்காடு சண்முகநாதன், காரைநகர் ச. கந்தப்பு, தெல்லிப்பழை "வாத்தியார்" செல்லத்துரை, பன்னாலை "சவாரி" சின்னத்தம்பி, பளை மு. திடவீரசிங்கம், புளியங்கூடல் சோமசுந்தரம், புத்தூர் த. கிட்டினர், புத்தூர் அப்பாத்துரை, நாரந்தனை கந்தப்பிள்ளை, நீர்வேலி இராமு, மல்லாகம் கனகர், கூவில் அந்தோணிப்பிள்ளை, நீர்வேலி "வாத்தியார்" செல்வரத்தினம்.

**1960ஆம் ஆண்டின் பின்னர் முக்கிய பங்கு கொண்டோர்.**

திருவாளர்கள்

மு.பாலன் (பன்னாலை). ஆ. வைத்திலிங்கம் (அளவெட்டி வடக்கு), பெ. ஐயாத்துரை (சுன்னாகம்), ந. சுப்பிரமணியம், கந்தசாமி மார்க்கண்டு (கொட்டடி),

கே. மார்க்கண்டு (அம்மன் கோயிலடி, யாழ்), தா. சபாபதி (மயிலிட்டி), த. தங்கலிங்கம் (மாரீசன்கூடல்), சி. பரஞ்சோதி (மாரீசன்கூடல்), த. துரைசிங்கம் (மாரீசன்கூடல்), ம. சுப்பிரமணியம் (மாதகல்), சி. குணரத்தினம் (மாதகல்), வே. மயில்வாகனன் (மாதகல்), வ. இராமலிங்கம் (மாதகல்), த. பரமு (மட்டுவில்), அ. பொன்னுத்துரை (மட்டுவில்), த. விநாயகமூர்த்தி (அளவெட்டி), சி. மகாலிங்கம் (கட்டப்பிராய்), ஆ. குமாரசாமி (உரும்பிராய்), த. சுப்பிரமணியம் (மாவிட்டபுரம்), க. கதிரமலையான் (மாவிட்டபுரம்), இ. பெரியதம்பி (சுன்னாகம்), ஏ. முருகையா (அளவெட்டி), வி. சுந்தர மூர்த்தி (அளவெட்டி), சி. சிவசுப்பிரமணியம் (மட்டுவில்), சு. கருணாநிதி (திருநெல்வேலி), த. கந்தையா (அச்செழு), சி. நடராசா (ஊர்காவற்றுறை), வே. முருகேசு (ஊர்காவற்றுறை), கந்தையா (இளவாலை), எசு. திருநாவுக்கரசு (மாதகல்), த. கனகரத்தினம் (உடுவில்), ம. மன்மதராசா, இ. இராசா, க. பழனி, ந. நடுவிலார், த. வன்னியசிங்கம், அ. அமிர்தநாதர் (உரும்பிராய்), சி. பரஞ்சோதி (இளவாலை), த. துரைசிங்கம் (மாரீசன்கூடல்), இ. பெரியதம்பி (கொல்லங்கலட்டி), வே. மயில்வாகனம் (மாதகல்), அ. நடராசா (உரும்பிராய்), க. ஐயாத்துரை (உரும்பிராய்), ஆ. சிவகுரு (உரும்பிராய்), மு. மார்க்கண்டு (காரைநகர்), க. மார்க்கண்டு (வீமன்காமம் வடக்கு), சு. தம்பிராசா (சுன்னாகம்), க. பாலகணபதி (ஊர்காவற்றுறை), செ. கனகரத்தினம் (மயிலிட்டி), த. சுப்பிரமணியம் (ஊரெழு), சு. கருணாநிதி (திருநெல்வேலி), க. சண்முகலிங்கம் (திருநெல்வேலி), வ. சுந்தரம் (திருநெல்வேலி), மு. சின்னத்துரை (ஊரெழு), பொ. திருபாலசிங்கம் (சங்குவேலி), ஆ. விநாயகம்பிள்ளை (மானிப்பாய்), க. செல்லத்துரை (மாதகல்), க. முத்து (தாவடி), கு. தவராசா (நீர்வேலி), த. பரமேஸ்வரன் (கருகம்பனை), எஸ். மயில்வாகனம் (அளவெட்டி), எம். பூபாலசிங்கம் (நீர்வேலி), ஆ. தம்பித்துரை (சுன்னாகம்), எஸ். நாகமணி (அளவெட்டி), வி. கே. குமாரையா (அரியாலை), வி. பி. சிவலிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ். மாணிக்கம் (ஆனைப்பந்தியடி), க. இரத்தினம் (கோப்பாய்), செ. கந்தையா (ஏழாலை), சி. அப்புத்துரை (சுன்னாகம்), சிவகுருநாதன் (சண்டிலிப்பாய்), ப. ஜோசப் (வயாவிளான்), சி. மகாலிங்கம் (கட்டப்பிராய்), இ. திருநாவுக்கரசு (பண்டத்தரிப்பு), சி. கணபதிப்பிள்ளை (மாரீசன்கூடல்), நா. வேலையா (மாதகல்), க. தங்கராசா (பிரான்பத்தை), எஸ். சோமசுந்தரம் (புன்னாலை), வாகீசன் (நாரந்தனை), க. கனகசபை (மானிப்பாய்), சத்தியவடிவேல் (உடுவில்), எஸ். பொன்னம்பலம் (மீசாலை), சி. சீவரத்தினம் (பத்தமேனி), மா. சிவானந்தன் (கட்டப்பிராய்), சி. சிவதாசன் (சித்திரமேழி), ந. சிதம்பரநாதன் (சித்திரமேழி), சே. நடராசா (அளவெட்டி), முத்துக்குமாரு (வட்டுக்கோட்டை), பே. பிள்ளையார் (உடுவில்), எஸ். இரத்தினசிங்கம் (ஈவினை), குழந்தை (மட்டுவில்), சோமசுந்தரம் (கட்டப்பிராய்), சி. சுந்தரராசன் (அராலி), க. சிவசுப்பிரமணியம் (மட்டுவில்), ப. கோபால் (மட்டுவில்), பொ. ரவீந்திரராசா (கோப்பாய்), கெ. சின்னத் தம்பி (மட்டுவில்), க. வேலுப்பிள்ளை (வத்தளை, சுன்னாகம்), சு. தியாகராசா (பளை

தெல்லிப்பழை), கா. சுப்பையா (நவுக்கிரி). சு. கந்தையா (திருநெல்வேலி), கே. சின்னத்தம்பி (அளவெட்டி), கே. வைரவப்பிள்ளை (பளை, மாவிட்டபுரம்), க. தவராசா (சங்குவேலி), வ. கனகரத்தினம் (உடுவில்), கே. இளையதம்பி (அளவெட்டி), சி. நடராசா (மட்டுவில்), நாகலிங்கம் (ஊர்காவற்றுறை), இராசையா (அளவெட்டி), மணியம் (சுதுமலை), ஐயங்கர் (கீரிமலை), உமாபதி (கந்தரோடை), அ. சிவசுப்பிர மணியம் (அராலி), மா. இராசரத்தினம் (அராலி), பொ. சத்தியவடிவேல் (கந்தரோடை), க. செல்வராசா (தும்பளை, கந்தரோடை), க. முருகையா, அளவெட்டி, சு. கந்தசாமி. சண்டிலிப்பாய், செல்மணி (அராலி), பி. சதாசிவம் (பலாலி, காங்கேசன்துறை), கா. திருநாவுக்கரசு (சித்தன்கேணி), நா. வேலையா (மாதகல்), நா. தருமலிங்கம் (மாதகல்). மா. சிவானந்தம் (கட்டப்பிராய்), வ. சின்னத்தம்பி (கொல்லங்கலட்டி), சிவப்பிரகாசம் (பண்டத்தரிப்பு), கந்தையா (சுழிபுரம்), சின்னையா (மூளாய்), துரைசிங்கம் (புலியர்), பொ. திருவாளசிங்கம் (திருவாலி).

மக்கிக்கல் வீதிச்சவாரி ஒரு வகையில் தார்போட்டபின் நின்றுவிட்டது. இதை ஈடுசெய்யும் வகையில் தரவை, புற்றரை சவாரி ஆரம்பமாயிற்று. அவற்றுள் முக்கியமான இடங்கள்.

01) அளவெட்டி - பிணாக்கை
02) யாழ்ப்பாணம் - முற்றவெளி
03) யாழ்ப்பாணம் - பண்ணையடி
04) நீர்வேலி
05) புத்தூர்
06) மயிலிட்டி - விமான ஓடுபாதை
07) மயிலிட்டி - பிள்ளையார் கோயிலடி வெளி
08) பளை - கூத்தியவத்தை
09) கீரிமலை - கருகம்பனை
10) மாதகல்
11) முருங்கையப்புலம்
12) நாரந்தனை
13) கரவெட்டி

# ஈழத்திற் சைவக் கிராமிய வழிபாடு

ஈழத்தில் இன்று நிலவுகின்ற சைவ வழிபாட்டு முறைகளை இரண்டு பிரிவிலே அடக்கலாம். அவையாவன ; வேதாகம விதிகளுக்கு அமைந்த வழிபாடுகள், வேதாகம விதிகளுக்கு அமையாத கிராமிய வழிபாடுகள். வேதாகம விதிகளுக்கு முற்றிலும் அமையாத வகையிற் கதிர்காம கந்தன் கோயில், நல்லூர் கந்தன் கோயில், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் என்பன இருக்கின்றன. கதிர்காமத்தில் அந்தணர் அல்லாதோர், கப்புறாளைகள் பூசகர்களாக இருக்கின்றனர். நல்லூரில் மூலமூர்த்தி இல்லை, வேல் வைத்த வணக்கம் நடைபெறுகின்றது. இதனை ஆறுமுக நாவலர் பெருமான் கண்டித்திருக்கின்றார். இக்கருத்தை இன்றும் ஆதரிப்பவர்களுள் மிகவும் முக்கியமானவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். செல்வச் சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். கதிர்காமம் உண்மையிலே காட்டில் உருவான பண்டைய முருகன் வழிபாட்டின் படிமுறை வளர்ச்சியே எனலாம். வள்ளியைப் பற்றிச் செவிவழி வந்துள்ள கதிர்காமக் கதைகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. இன்றும் வள்ளி வழங்கியதான தேனும், தினைமாவும் முருகனுக்குக் கதிர்காமத்தில் சிறப்பாக படையல் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலைப்படி கருணாகரத் தொண்டமானால் சோழப் பேரரசு காலத்திலே தொண்டைமானாறு அமைக்கப் பட்டது. தொடக்கத்தில் கப்பல் ஏறுவோர் இறங்குவோர் வணங்கிய முருகனின் சிறுகோயிலே காலகதியில் பெருங்கோயிலாக மாறியது எனக் கொள்ளலாம். கப்பற் பிரயாணம் அச்சம் நிறைந்ததானபடியால் துறைமுகக் கடவுளர் வழிபாடு நடைபெற்றது. இந்த மூன்று கோயில்களிலும் நிலவுகின்ற புறநடைகள் உண்மையில் அக்காலத்தில் நிலவிய பொதுமக்களின் வழிபாட்டை உண்மைப் படுத்துகின்றன. கிராமிய வழிபாடு என்பதிலும் பார்க்க பொதுமக்கள் வழிபாடு என்பது பொருத்தமெனலாம்.

இந்தியாவிற்கு அணித்தாக ஈழம் அமைந்துள்ளது. எனவே, அங்கு உருவாகிய வரலாற்றுச் சக்திகள் ஈழத்தைப் பெரிதும் பாதித்தன. அங்கு நிலவிய வைதிக வழிபாட்டு முறைகளும் பொதுமக்கள் வழிபாட்டு முறைகளும் ஈழத்தில் இடம்பெறலாயின. தொன்றுதொட்டே இத்தொடர்பு நிகழ்ந்திருக்கின்றது. சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு, விசய நகரப் பேரரசு என்பவைகளின் காலத்தில் இப்படியான மதத் தொடர்புகள் மேலும் வலுப்பெற்றன. யாழ்ப்பாண அரசு 1619 வரையும் சுதந்திரமாக வட இலங்கையில் இயங்கி வந்தது. இலங்கைமீது போர்த்துக்கேயர் 1560இல் படையெடுத்து வெற்றிகண்டனர். பின், 1619இல் யாழ்ப்பாணத்தரசைக் கைப்பற்றித் தமது மாகாணமாக ஆண்டு வந்தனர். போர்த்துக் கேயரின் பிடியில் அகப்பட்ட யாழ்ப்பாணத்தில் நிலவிய சைவ வழிபாட்டு முறைகள் நசுக்கப்பட்டன. ஈழத்தில் உள்ள புகழ்பெற்ற சைவத்தலங்கள் பல - திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், நல்லூர், மாவிட்டபுரம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த சைவ மக்கள் தங்கள் பண்டைய வழிபாட்டு முறைகளை வெளிவெளியாக நடத்த இயலாது தவித்தனர். வீட்டு வளவின் பின்புறம், மரத்தின் அடிப்பாகப் பொந்துகள், பனங்கூடல்கள், காட்டுப்பகுதிகள் என்பவற்றில் வேல், சூலம், கல்லுப்பிள்ளையார் போன்றவற்றை வைத்து வணங்கினர். இதனாலேதான் இன்று ஈழத்தின் பல பாகங்களிலும் கிராமப்புறத் தெய்வ வழிபாட்டு நிலையங்கள் இருக்கின்றன. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் (1796 - 1948) சமயக் கொள்கையில் சற்றுத் தாராளமான போக்குக் காணப்பட்டது. ஆறுமுக நாவலர் போன்றவர்கள் சைவ மறுமலர்ச்சியையும், நாட்டுப்பற்றையும் உருவாக்கினர். இதனால் அழிந்த பழம்பெருங் கோயில்கள் திருத்தப்பெற்றன. பொதுமக்களுக்குரிய கோயில்களிலே தாராளமாக வழிபாடுகள் நிகழத் தொடங்கின. போர்த்துக்கேயரால் நல்லூர் கந்தசுவாமி கோயில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இருந்தும் முருகனில் நம்பிக்கையுடைய பொதுமக்கள் தலைமறைவாக முன்னர் கோயில் இருந்த நிலையத்தில் வேல் ஒன்றை வைத்து வணங்கினர் என்பது செவிவழிவந்த கதை. இந்த வேல்தான் பின்னர் மூலமூர்த்தியாகியது என்பர் ஒருசாரார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதிமூல மூர்த்திக்கு அருகில் நிலத்தில் வேல் ஒன்று உள்ளது. இதற்கும் நீராட்டித் திருவிளக்கு காண்பிப்பது இன்றும் வழக்கிலிருக்கின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டபோது அந்த இடத்தில் சைவமக்கள் தலைமறைவாக வந்து இரவோடு இரவாக வேலை வைத்த வணங்கி வந்தனர். இந்த வேல் பின்னர் மூலமூர்த்தியுடன் வணக்கத்திற்கு வைக்கப்பட்டது என்பர் இன்றைய ஆதீன கர்த்தர்.

இன்றைய ஈழத்தின் வடபகுதியில், கிழக்குப் பகுதியில், மலையகத்தில் இன்னும் பரவலாக எல்லா நகரங்களிலும் சைவக் கோயில்கள் இருக்கின்றன. சைவ மக்களின் ஆன்மீக வாழ்விற்கு இவை உறுதுணையாக அமைந்துள்ளன. இவற்றுடன் பொதுமக்களின் வணக்கத்திற்குரிய கிராமியக் கோயில்கள் புகழுடன் திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணம் வவுனியா வீதியில் உள்ள

முறிகண்டிப் பிள்ளையார் கோயில், வடமராட்சி தில்லையம்பல பிள்ளையார் கோயில் என்பவைகளைத் தரலாம். இந்தியாவில் இருந்து ஈழத்திற்கு வந்த பொதுமக்களின் வழிபாட்டு முறைகள் இந்நாட்டிற்கு ஏற்ப மாறுதலும் அடைந்துள்ளன. தமிழ் நாட்டிலே ஐயனாருக்கு மிருக பலியீடு இல்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ள சுன்னாகம் ஐயனார் கோயிலிலும், காங்கேசன்துறை ஐயனார் கோயிலிலும் மிருக பலியீடு இருந்தது. அது தற்போது நிறுத்தப்பட்டது. மேலும், தமிழக ஐயனார் கோயில்களில் உருவத்தாற் பெரிய மண்குதிரைகள் இருக்கின்றது. இங்கு இவை பெரும்பாலும் இல்லை. ஈழத்துக் கோயில்களில் ஆடு, கோழி என்பன மட்டும் பலியிடப்படுகின்றன. எருமை பலியிடும் வழக்கம் இல்லை எனலாம். இந்தியாவில் இவ்வழக்கம் இருக்கின்றது. மட்டக்களப்பில் வாழும் சைவப் பெருமக்கள் பலரின் குலதெய்வ மாகவே கண்ணகி அமைகின்றாள் என்கிறார் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். பருத்தித்துறையில் உள்ள மாத்தனை என்னும் ஊரில் உள்ள கண்ணகை அம்மன் கண் நோயைத் தீர்க்கும் தெய்வமென அவ்வூர் மக்கள் கருதுகின்றனர். இக்கடவுளுக்குப் பறை முழக்கி வளந்து வைத்துப் பொங்கி கண்மடல் செய்து கொடுத்துக் கண்நோய் நீங்கியவர் நேர்த்திக்கடன் செய்வர்.

இன்று ஈழத்திற் கிராமிய வழிபாடுகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருப் பதற்கு கிராமிய வழிபாட்டிற்குப் பொதுவான காரணங்களையும் ஈழத்திற்குச் சிறப்பான காரணங்களையும் ஆராயலாம். முதலாவதாக, வேதாகம வழிபாடுகள் உயர்ந்த உட்பொருள்களை உடையவை. பொதுமக்களுக்கு அவை பெரும்பாலும் விளங்குவதில்லை. இரண்டாவதாக இவ்வழிபாடுகளுக்கு உரிய செய்முறைகள் மிகவும் விரிவானவை. இவற்றால் பொதுமக்களுக்கு அலுப்பு ஏற்படுகின்றது. குடமுழுக்கு பொதுமக்களுக்கு உட்பொருள் விளக்கத்திலும் பார்க்கப் பக்தியை உருவாக்குகின்றது எனலாம். வேதாகம வழிபாட்டுமுறை நிகழும் கோயில்களில் பூசையிலும் பார்க்க இசை நிகழ்ச்சிகளும் கதாப் பிரசங்கங்களும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் பொதுமக்களை கவர்கின்றது என்பது உண்மை. மூன்றாவதாக கிராமியக் கடவுளைப் பொதுமக்கள் நேரடியாகச் சென்று வழிபடுகின்றனர். அங்கு பணிபுரிகின்ற பூசாரிமார்கள் அந்தணர்களைப் போல கட்டுப்பாடுகளையும், விதி களையும் அழுத்தமாக கடைப்பிடிப்பதில்லை. இதனால் கடவுளருடன் பொதுமக்கள் நேரடியாகவே அன்புப்பிணிப்பை உண்டாக்குகின்றனர். நான்காவதாக, கிராமிய வழிபாடுகள் மிகவும் இலகுவானவை ; எளிமையானவை ; எவராலும் நன்கு பின்பற்றக்கூடியவை. பொதுமக்கள் தாம் விரும்பிய தினங்களில் கிராமியக் கோயில்களிற்குச் சென்று, புழுக்கல், மடை, படையல் என்பவற்றைச் செய்கின்றனர். கிராமவாசி ஒருவன் தான் அன்புடன் தேடிய பச்சையரிசி, பால், பழம், இளநீர், கரும்பு என்பவற்றைக் கிராமியக் கோயிலுக்கு எடுத்துச் செல்கின்றான். தானே பொங்குகின்றான், தானே படைக்கின்றான். அந்தணரின் சேவை அங்கு இல்லை. எனவே கிராமவாசி கடவுளுடன் தான் நேரடியாகத் தொடர்புகொள்ளும் அன்பு

நிலையை பெறுகின்றான். ஐந்தாவதாக கிராமக் கோயில்கள் எந்த நேரத்திலும் திறந்தபடியே இருக்கும். கிராமவாசி ஒருவன் தான் நினைத்தநேரம் கோயிலுக்கு சென்று தன்குறையைச் சொல்லி முட்டுத்தீர அழுகின்றான். கடவுளிடம் தன் பாரங்கள் எல்லாவற்றையும் ஒப்படைத்த உணர்வுடன் வீடு திரும்புகின்றான். ஆறாவதாக, ஆசௌசம் போன்ற விதிகள் கிராமியக் கோயில்களில் பின்பற்றப்படுவதில்லை. நோயாளி, பேய்பிடித்தவர் போன்றவர்களை கோயில்வாசலில் வைத்து உறவினர் கடவுளை வணங்குவர். பூசாரியார் அவர்களுக்குத் தீர்த்தம் கொடுப்பார் ; திருநீறு போடுவார் ; நூல்கட்டுவார். ஆனால் அந்தணர்கள் இப்படிச் செய்யார்கள். பருத்தித் துறை வல்லிபுர ஆழ்வார் கோயில், காங்கேசன்துறை குருநாதசாமி கோயில் போன்றவற்றில் வேதாகம முறைகளே பின்பற்றப்படுகின்றன. எனினும், பொதுமக்கள் பொங்கல் செய்ய ஒழுங்குகளும், வசதிகளும் ஆக்கப்பட்டுள்ளன. அரசினர் வைத்தியசாலைகளில் இப்பொழுது கோயில்கள் அமைக்கப்படுகின்றன. நோயாளிகள் இங்கு கூடித் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்றவற்றை படித்து வணங்குவர்.

வைத்தியசாலை இறப்பும் பிறப்பும் நிகழும் இடம். எனவே, நித்திய ஆசௌசம் நிறைந்த இடம் எனக்கூறுவர் வைதிக பரம்பரையில் வந்தோர். எனினும் வைத்தியசாலை கோயில்களில் ஐயர் பூசை செய்வதும் வழக்கம். காலத்தையொட்டி இந்த வழக்கம் வலுப்பெறுகின்றது. நீதிமன்றங்களுக்கு அருகாமையில் மரத்தடி பிள்ளையார் போன்ற தெய்வங்கள் இருக்கின்றன. இனி, ஈழத்தைச் சிறப்பாக நோக்குமிடத்து, போர்த்துக்கேயரின் ஆட்சியும் (1505 - 1658) ஒல்லாந்தரின் ஆட்சியும் (1658 - 1796) நடைபெற்றன. இக்கால எல்லையில் ஈழத்து மன்னர்களால் ஆதரிக்கப்பெற்ற வைதிக வழிபாட்டுக் கோயில்கள் நலிவுற்றன. இந்த ஆட்சியாளர் நடத்திய மதப்பொறுமையில்லாக் கொள்கை வேதாகம வழிபாட்டிற்கு இடம்கொடுக்க வில்லை. எனவே, இலகுவாகப் பின்பற்றக்கூடிய கிராமிய வழிபாட்டு முறைகள் தலைமறைவாகப் பல்கிப்பெருகின என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. ஆறுமுக நாவலர் போன்றவர்கள் வேதாகம வழிபாட்டை வளர்த்தனர். மிருக பலியை வன்மையாகக் கண்டித்தனர். இருந்தும் இந்தக் கிராமிய வழிபாட்டு முறை நீங்கவில்லை.

வட ஈழத்தில் சமாதிகள் பல இருக்கின்றன. இவை வணக்கத்திற்குரியவை யாகவே அமைந்துள்ளன. இறந்தவரை அடக்கம் செய்த இடத்தில் நடுகல் நடுவது பழந்தமிழர் வழக்கம். இந்த வழக்கமே பிற்காலத்தில் சமாதி கட்டும் வழக்கமாக மாறியது. யாழ்ப்பாணத்தில். மட்டக்களப்பில், மலையகத்தில் இன்று பல சமாதிகள் இருக்கின்றன. இங்கு குருபூசைகள் நடப்பது வழக்கம். சடையம்மா சமாதி, கடையிற் சாமியார் சமாதி எனச் சமாதிகள் அடியவர்களின் பெயரால் அமைக்கப்படுகின்றன. அண்மைக்காலத்தில் அமரரான கொழும்புத்துறை யோகர் வணக்கத்திற்குரிய

மகான் ஆகிவிட்டார். ஈழத்தில் வாழ்ந்து சமாதியான பக்தர்கள் சித்தர்களுக்குச் சமாதி கட்டி வணங்கும் வழக்கம் ஓரளவு செல்வாக்குப் பெற்றது.

ஈழத்துக் கிராமியக் கடவுளரை மேல்வரும் வகையிற் பிரித்துப் பார்க்கலாம். பிள்ளையார், வைரவர், வீரபத்திரர், காளி, ஐயனார் என்போர் வைதிக வழிமுறையில் வந்த கடவுளர்கள். காளி, வைரவர், வீரபத்திரர், அண்ணமார், கூட்டத்தார் போன்ற கடவுளர் மிருகபலி பெறுவர். பெண்கடவுளராக காளி, கண்ணகி, மாரியம்மன், நாச்சிமார், காமாட்சி, சீதையம்மன் போன்றவர் இருக்கின்றனர். கண்ணகியும், சீதையும் பத்தினிப்பெண்கள் வழிபாட்டில் அடங்குவர். நாச்சிமார், முனியப்பர் வழிபாடு வீரவணக்கத்திற்குரியது என்பர் ஒருசாரார். நாச்சிமார் வழிபாடு தமிழ்நாட்டில் உள்ள ஏழு கன்னிகைகள் வழிபாட்டை ஒத்தது. முனியப்பர் வழிபாடு முனியாண்டியின் வழிபாட்டில் இருந்து எழுந்ததோ என்ற கேள்வியும் எழுகின்றது. நாகதம்பிரான் வழிபாடு இன்று வல்லிபுரக் கோயிலிலும், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலிலும், நாகர்கோயிலிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. தென்புலத்தார் வழிபாடாகச் சமாதிகள் அமைந்துள்ளன. இப்படியான சமாதிகள் மலையகம் உட்படத் தமிழ்பேசும் மக்கள் வாழும் இடங்களில் இன்றும் இடம்பெறுகின்றன. மரவழிபாட்டின் அம்சமாக வேம்பு, அரசு, நாவல், ஆல், புளி, மருது முதலிய மரங்கள் உண்டு. வேம்பும் அரசும் சேர்ந்து பின்னி வளர்ந்தால் அவை அம்மனையும் சிவனையும் குறிக்கும் என்பர். கிராமியக் கோயில்கள் சிலவற்றின் பெயர் மரப் பெயரையே முன்கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக மருதடி பிள்ளையார், அரசடி அம்மன், புளியடி வைரவர், ஆலமரத்தடி முனியப்பர், புங்கடி வைரவர், நாவலடி வைரவர் என்பவற்றைத் தரலாம்.

இன்னல்களைப் போக்குவதற்கே பிள்ளையார் வழிபாடு நடைபெறுகின்றது. மரஅடி, குளம், தெரு போன்ற இடங்களில் பிள்ளையாரை வைத்து மக்கள் வணங்குகின்றனர். இந்தப் பிள்ளையார் கோயில்களில் பல இன்று குடமுழுக்குப் பெற்றுள்ள கோயில்களாக மாறிவிட்டன. தெருவடிப் பிள்ளையார்களில் முறிகண்டிப் பிள்ளையார் பயணிகளின் இன்னல்களைப் போக்குபவர் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகின்றது. மாடுகளைப் பாதுகாக்கும் தெய்வமாக பருத்தித்துறையில் இருந்து சில கல் தொலைவில் உள்ள தில்லையம்பலப் பிள்ளையார் அமைந்துள்ளார். மாட்டுப் பட்டியுடன் பிள்ளையார் பெத்தையராக இருந்தார் என்பது கதை. பேத்தை வயிறர், பெத்தையர், ஆயிற்று என்பர். மோதகம் அவித்து மடையிடுவது வழக்கம். மிகவும் பெரிதாக ஒரு மோதகமும் சிறியதாக பல மோதகமும் செய்யப்படும். பெரிய மோதகம் ஆனை மோதகம் எனப்படும். உயர்ந்த நோக்கங்களிற்காகவே பிள்ளையாரை வழிபடுவர் மக்கள்.

வைரவர், காளி, ஐயனார், அண்ணமார் போன்ற தெய்வங்கள் தம்மை வழிபடாதவருக்கும், நிந்திப்பவர்களுக்கும் குறைபாடுகளை ஏற்படுத்துவார்கள்

என்பது பொதுமக்களின் நம்பிக்கை. தலைவலி, கழுத்துவலி, முடக்குவாதம், குறைப்பிரசவம் என்பவைகளை இத்தெய்வங்களின் சீற்றத்தால் வருபவை என மக்கள் எண்ணுகின்றனர். இக்குறைபாடுகளை போக்குவதற்காகப் பலியிடுவதற்கு ஆடு, கோழிகளை நேர்ந்து வேள்வி செய்வர். மடைபோடுதல் போன்றவற்றை நடாத்துவர். சூலம் செய்து கொடுத்தல், கல்விளக்கு செய்து கொடுத்தல், சங்கு, சேமக்கலம், மணி முதலியவை வழங்குதல் போன்ற தானங்களையும் மக்கள் கொடுப்பர். வேள்வி நடைபெறும் கோயில்களில் அந்தணர் பூசாரியராக இருப்ப தில்லை. மற்ற எந்தக் குலத்தவரும் பூசாரியராக இருக்கலாம். எனினும் வீரசைவர் குலத்தவரே பெரும்பாலும் பூசாரிகளாக இக்கோயில்களில் இருக்கின்றனர். அரிசனங்களின் கோயில்களில் அக்குலத்தில் மூத்தவர் ஒருவரே பூசாரியராக அமைவர். எட்டு நாட்களுக்கு விளக்கு வைத்து வழிபாடு நடாத்திய பின்னர் வேள்வி நடைபெறும். தோட்டங்கள், வயல்களில் களவெடுப்பவர்களை காளி, வைரவர் போன்ற தெய்வங்கள் தண்டிக்குமென மக்கள் நம்புகின்றனர். "சூல வைரவா சுற்றிப் பிடியடா, வீரபத்திரா வெள்ளிப் பிரம்பு எடுத்தடியடா, காளியம்மா கழுத்தை நெரியடி யம்மா" என்ற கூற்றுக்கள் இந்த நம்பிக்கையை உணர்த்துகின்றன. வைரவர் பல அடைமொழிகளைக் கொண்டுள்ளார். எடுத்துக்காட்டு ; உக்கிர வைரவர், நரசிங்க வைரவர். சுடலை வைரவர், காட்டு வைரவர், பணிக்கர் வைரவர். என்பன வேள்வி நடவாத கோயில்களில் உள்ள வைரவர் ஞான வைரவர் என்ற பெயரைப் பெற்றுள்ளார். காளிக்கு பல பெயர் உண்டு. வீரமாகாளி, பத்திரகாளி என்பவை சில. அம்மன் வழிபாடு, முத்துமாரியம்மன், காமாட்சியம்மன் போன்ற பல பெயர்களில் நடைபெறுகின்றது. அம்மை, கொப்புளிப்பான், சின்னமுத்து போன்ற நோய்களை அம்மன் போக்குவாள் என்பது மக்கள் நம்பிக்கை. கரகாட்டம், குளிர்த்தி, மடை, கஞ்சி வார்த்தல் போன்றவை அம்மனுக்குரியவை. அம்மன் கோயில்களில் சித்திர புத்திர நாயனார் கதை, செட்டிச்சி அம்மை கதை போன்றவை படிக்கப்படுவது வழக்கம். கரக ஆட்டத்துடன் உடுக்குப்பாட்டு, அம்மன் காவியம் போன்றவை படிக்கப்படும். "வாரா வினைகள் வந்தாலும் முத்துமாரி வஞ்சனைகள் செய்திடாதே முத்துமாரி, தவத்தால் மூத்தவளே முத்துமாரி" என்ற அடிகள் ஆதிசக்தி வழிபாட்டை நினைவுபடுத்து கின்றன. இது தமிழருக்கே உரியது என்பது என்பர்.

கண்ணகி வழிபாடு, சீதை அம்மன் வழிபாடு, திரௌபதை அம்மன் வழிபாடு என்பவை ஈழத்தில் இன்றும் நடைபெறுகின்றன. கண்ணகி என்ற பெயர் திரிந்து கண்ணகை எனவும், கண்ணகை அம்மன் எனவும் ஆயிற்று. கண்ணகி வழிபாடு நடந்த இடங்களிற் சில இப்பொழுது வேதியர்களால் அம்மன் கோயில்களாக மாற்றப் பட்டுள்ளன. இங்ஙனம் நடந்த ஒரு கோயிலில் கண்ணகி பிரகார நாயகியாக அமைந்துள்ளார். இது மாவிட்டபுரத்திற்கு அருகில் நடந்துள்ளது. நுவரெலியாவில் உள்ள சீதா எலியாச் சீதையம்மன் கோயில், கிழக்கு மாகாணத்தில் உள்ள திரௌபதை அம்மன் கோயில் போன்றவை காப்பியவழி வந்தவை. நாச்சிமார் வழிபாடு எழுந்தது பற்றிக் கருத்து வேற்றுமை உண்டு. ஈழத்துச் செவிவழி வந்துள்ள

கதைப்படி வன்னியில் உள்ள ஏழு நாச்சியர்கள், போர்த்துக்கேயரின் கைபட்டு கற்பிழந்து வாழ விரும்பாமல் குன்றிமணியை இடித்துத் தின்று மடிந்தனர். இவர்கள் நினைவிற்காகவே நாச்சிமார் வழிபாடு எழுந்தது என்பர் ஒருசாரார். முனியப்பரும் போர்த்துக்கேயரை எதிர்த்து வீரமுடன் போராடி மடிந்த தளபதி என்பதும் செவிவழி வந்த கதை. காமாட்சி அம்மன் இரும்பு உலோகத் தொழிலாளரின் தெய்வம். அண்ணமார், கூட்டத்தார் என்பவை மரம் ஏறுபவர்களின் தெய்வங்கள். கூட்டத்தார் என்பவை போர்த்துக்கேயரை எதிர்த்துப் போராடி மடிந்த பாளைக்கத்தி பள்ளரின் கூட்டத்தைக் குறிக்கும் என்பது செவிவழிவந்த கதை. சேவுகர், படைக்கலர் என்ற வழிபாடுகள் இப்பொழுது இல்லை எனலாம். இவை ஐயனாரின் காவற் படையினர் என்பது தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் நிலவுகின்ற நம்பிக்கை. அண்ணமார் வழிபாடு பற்றிய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. இறந்தவர்களில் மேம்பட்டவர்களாக கருதப்படுகின்ற தென்புலத்தார் வழிபாடு இது என்பர் ஒரு சாரர். அண்ணல்மார் என்பதுதான் அண்ணமாரெனத் திரிந்தது என்பர். விறுமர், கிங்கரர் என்பவை சுடலையில் உள்ள தேவதைகள் என்பர். மந்திரசித்தி, செய்வினை, சூனியம் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் இத்தெய்வங்களை வழிபடுவர். காடேறி, கல்லெறிமாடன் என்பவையும் கெடுதலைச் செய்கின்ற தேவதைகள். வேட்டைக்குப் போகின்றவர்கள் காடேறியை வழிபட்டனர். கல்லெறிமாடன் வீட்டிற்கு கல்லெறிகின்ற கெட்ட தேவதை. வேல் வைத்து வணங்க இதன் குறைபாடு நீங்கும் என்பதும் நம்பிக்கை. சலவைத் தொழிலாளரின் தெய்வம் பெரியதம்பிரான்.

மரங்களில் முனிகள் குடிகொண்டு இருக்கின்றன என்பது ஐதீகம். இதனால், மரங்களுக்குக் கீழ் வெறும் கல்லுமேடை போன்றவற்றை அமைத்தும் வழிபடுவர் மக்கள். இந்த நம்பிக்கையை வலியுறுத்தும் வகையில் ஒரு கதையைச் சொல்லலாம். மின்சாரம் வழங்குவதற்காக மிகப்பெரிய ஆலமரம் ஒன்றைத் தறிக்க வேண்டிய தாயிற்று. அதற்குப் பெயர் முனியால். தறிக்கின்ற ஒப்பந்த வேலையை ஒருவர் மேற்கொண்டார். அதற்கு முன்னர் வெள்ளிக்கிழமை நாளில் கல்லொன்றை வைத்து படையல் செய்து வணங்கிய பின்னர், கல்லை எடுத்துப் பிரபலமமான ஆலய வீதியில் ஈசான மூலையில் அவர் வைத்தார். இப்படியாக கல்லை எடுத்து முனி அகற்றப்பட்ட பின்னரே ஆலமரத்தை தறிக்கின்ற வேலை தொடங்கிற்று. வேலைகள் யாவும் இன்னலின்றி முடிந்ததும் மீண்டும் அந்த ஆலயத்திற்கு சென்று பூசை கட்டினார்கள்.

நீலி என்பது காளியின் பெயர். இந்த வழிபாடு இப்பொழுது இல்லையெனலாம். ஒவ்வொரு வீட்டிலும் தெற்கு வேலியில் கள்ளி மரமொன்றை நட்டிருப்பார்களாம். இது எல்லைக் கள்ளி எனலாம். கள்ளி நடும் வழக்கம் சோழர் காலத்து கல்வெட்டில் காணப்படுகின்றது. இந்தக் கள்ளிமரத்தின் கீழ் கல்லொன்று வைத்து நீலியை வழிபட்டனர். "ஆய்ச்சி, ஆயச்சி வேலியுக்கை நீலி" என்ற பழம் கூற்று இதனையே உணர்த்துகின்றது. புத்தாண்டு, தைப்பொங்கல், பங்குனித் திங்கள், ஆடிப்பிறப்பு போன்ற நாட்களில் வேலியில் நீலிக்குச் சிறிது படையல் செய்யப்படும். இப்படி படையல்

செய்யப்படும் உணவை திருப்பியெடுப்பது கிடையாது. ஏனெனில், நீலி சுவைத்ததை உண்டால் நோய் அணுகும் என்பது நம்பிக்கை. வேதாகம முறைப்படி நடக்கின்ற கோயில்களில் நவக்கிரகங்களுக்கு நிவேதிப்பதும் இப்படியே செய்யப்படுகின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

தென்புலத்தார் வழிபாடு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களில் நிறைய உண்டு. வீரசைவர்கள், பரத குலத்தவர் சிலர், அடியார் கூட்டத்தவர் போன்றவர்கள் இறந்தால் அவர்களை உப்பும் திருநீறும் இட்டு அடக்கம் செய்வது வழக்கம். இப்படியானவொருவர் இறந்தால் "அடங்கிவிட்டார், சமாதியாகி விட்டார், கட்டையை விட்டுவிட்டார்" எனக்கூறுவர். யாழ்ப்பாணத்தில் சேர் பொன் இராமநாதன் சமாதி வைக்கப்பட்டார். கொழும்புத்துறையில் உள்ள யோகர் சுவாமியின் நினைவுமண்டபம் அன்னாரின் சீடர்களின் வழிபாட்டு நிலையமாக அமைந்துள்ளது. கீரிமலையில் அடியார்களின் சமாதிகள் பல இருக்கின்றன. மலை நாட்டில் உள்ள பெருந்தோட்டங்களில் சமாதிகள் பல இருக்கின்றன.

அடுத்ததாக இக்கோயில்களின் அமைப்பையும், பூசாரிகளின் கடமை களையும், வழிபாட்டு முறைகளையும் ஆராயலாம். இக்கோயில்கள் யாவும் மரத்தின் கீழ் உள்ள திறந்தவெளி மேடைகளாகவும் அல்லது சிறு கொட்டில்களாகவும் அல்லது சிறு அறை உள்ள கட்டிடமாகவும் காட்சி தருகின்றன. பெரிய கட்டிடங்கள் இல்லை எனலாம். மரங்களின் கீழ்த்தான் பொங்கல் "படையல்" வழிபாடு எல்லாம் நடைபெறும். தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் பூசாரி ஒருவர் சொன்ன கதை உண்மையை விளக்குகின்றது. "பெரிய கோயில் கட்டிடம் எல்லாம் இந்தப் பெத்தையருக்குப் பிடியாது." அப்படிக் கட்டினால் நான் குடியெழும்பிப் போயிடுவேன் என்றார் கனவில். செல்வர் பலர் கட்டிடம் கட்டித் தருவதாகக் கூறினர். நாங்கள் விடவில்லை" என்றார். முன்னர் சுட்டிக்காட்டியது போல பூசாரிகள் வீரசைவர் களாகவும், பரம்பரை பரம்பரையாக வருகின்ற மூத்தவர் ஒருவராகவும் இருக்கின்றனர். இவர்களுடைய பூசை முறையிற் பொதுமக்களுக்கு நம்பிக்கையுண்டு. மலைநாட்டில் உள்ள பூசாரிகளின் பிள்ளைகள் சிலரை அழைத்துக் திருக்கேதீச்சரத்தில் உள்ள அந்தணர்க்குரிய குருகுலப் பாடசாலையில் குருத்துவப் பயிற்சி அளிக்க எடுத்த முயற்சி வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. குருப்பட்டம் பெற்ற ஒருவர் கிராமியக் கோயிலில் கடமை செய்யும் போது பொதுமக்களுடன் ஒட்டி உறவாட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். பெரும்பாலும் பூசாரிமார்கள் மக்களுடன் சேர்ந்து அவர்கள் கொடுப்பதை வாங்கி உண்டு அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொள்வர். பூசாரிமாரை நியமிப்பதோ, தெரிவு செய்வதோ கிடையாது. ஒரு பூசாரியார் இறக்க அவருக்கு உதவியாக இருந்தவர் அந்த இடத்தைப் பிடிப்பார். மேலும் பூசாரிமார் நூல் கட்டுதல், திருநீறு போடுதல், வேப்பிலை பிடித்துப் பேய்க்குப் பார்த்தல், சாந்திசெய்தல், கழிப்புக் கழித்தல் போன்றவற்றி

ஈடுபடுவர். நினைத்த காரியம் சொல்லுதல், மைபோட்டுப் பார்த்தல் போன்ற வற்றையும் செய்வர். அந்தணர்கள் செய்யமுடியாத, நிரப்பமுடியாத தேவைகளை பூசாரிமார்கள் செய்துமுடிப்பது தெளிவு. பூசாரிமார் பொங்கல் விழாப்போது உருவாடி அருள்கொடுப்பது வழக்கம்.

ஏற்கனவே குறிப்பிட்டது போலக் கிராமியக் கடவுளரின் வழிபாட்டுமுறை மிகவும் இலகுவானது. இதில் எவரும் நன்கு கலந்துகொள்ளலாம். பொங்கல், படையல், மடை எல்லாம் மிகவும் எளிமையாகப் பக்தி சிரத்தையுடன் நடக்கும். பூசாரிகள் மேற்பார்வை செய்வர். அதிகமான காணிக்கைப் பணம், அர்ச்சனை, காளாஞ்சி இங்கு கிடையா. பொங்கினவர் வறியவர்களும், பொங்க முடியாத நிலையில் உள்ளவர்களும் நீட்டும் பெட்டிகளில் தாராளமாகப் பொங்கல் போடு வார்கள். இதனாலேதான் "பொங்கினவனிலும் பார்க்கத் தண்டினவனுக்கு புக்கை கூட" என்ற கூற்று எழுந்தது. கிராமத்து மக்கள் ஒன்றுகூடிச் சமுதாய வாழ்க்கை அமைப்பில் கலக்கும் இடம் கிராமத்துக் கோயில். இங்கு சாதிக்கட்டுப்பாடு இல்லை. பொங்கற் பந்தல் போடுவது அரிசனத் தொழிலாளரின் வேலை. வாத்தியம் இசைப்பவர், பறையை ஏந்தி நிற்பர். மற்றக் குலத்தவர்களுக்கும் அதிகம் கட்டுப்பாடு கிடையாது. "சற்றே விலகி நில்லும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்" என்ற பேச்சுக்கு இடம் இல்லை.

இந்த வழிபாட்டின் இன்றைய நிலையை கல்வி, சமுதாயப் பொருளாதார அரசியற் பின்னணியில் ஆராயலாம். இந்நாட்டிலே கட்டாய இலவசக் கல்வி நிகழுகின்றது. இதன் பயனாக மக்களிடம் அறிவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கிராமிய வாழ்க்கையை, வானொலியும் செய்த்தித்தாளும் பாதிக்கின்றன. அறிவு பெற்றவர்கள் படிப்படியாகப் புதுமையை விரும்புகின்றனர். பழைய பழக்கங்களைத் தள்ளு கின்றனர். அத்துடன் இந்த நாட்டில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற சமயப் பாடத்திட்டமும் மிகவும் முக்கியமானது. புராணக் கதைகள், நாயன்மார் வாழ்க்கை வரலாறு என்பவற்றுடன் திருவருட்பயன், திருக்குறள், தேவாரம், திருவாசகம் என்பவை இடம்பெறுகின்றன. இதனால் கடவுள் வழிபாடு, மெய்ப்பொருள் விளக்கம் என்பவை பற்றிய அறிவு இளம் தலைமுறையினரிடம் வளர்கின்றது. இவர்கள் கிராமிய வழிபாட்டை அதிகம் நாடாமலிருப்பதும் இயற்கையையே. சமுதாய அடிப்படையில் ஆறுமுகநாவலர் தொடக்கம் அச்சுவேலி சிவப்பிராமண குரு குமாரசுவாமிக் குருக்கள் வரை வேதாகம வழிபாட்டு முறையையே வலியுறுத்திக் கூறினர். பழைய கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்கின்ற கிரியையை நாவலர் தொடக்கி வைத்தார். கண்ணகி வழிபாடு கூடச் செட்டிச்சி வழிபாடு என இவரால் கண்டு பிடிக்கப்பட்டது. சமுதாயத்தில் எழுந்த சைவ மறுமலர்ச்சி வேதாகம வழிபாட்டை ஊக்குவித்தது. மிருக பலியை இந்தியாவிற் புலவர் தேசிகவிநாயகம் பிள்ளை எதிர்த்தது போல, இங்கும் சோமசுந்தரப்புலவர் போன்றோர் எதிர்த்தனர். காந்திய இயக்கத்தில் ஈடுபட்டோர் பலி நிறுத்த இயக்கத்தில் ஈடுபட்டனர்.

ஸைவபரிபாலனசபை போன்ற நிறுவனங்கள் சமயச் சீர்திருத்தத்தை வேண்டி உழைத்தன. மிருகபலி நிறுத்தப்பட்ட கிராமிய கோயில்கள் சிலவற்றிலே திருவெம்பாவை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. நிலமானிய முறையும், சாதிக் கட்டுப்பாடும் தளரத் தொடங்கின. அரிசனங்களின் ஆலயப் பிரவேச இயக்கம் வலுப் பெற்றது. போராட்டங்களும் நிகழ்ந்தன. கிராமிய வழிபாடுகளில் ஈடுபட்ட அரிசனங்கள் வேதாகம அமைப்பு கோயில்கள் பலவற்றிலும் சென்று வணங்கும் உரிமை பெற்றனர். இதனாற் கிராமிய வழிபாட்டு முறைகள் முதன்மை இடத்தை இழக்கின்றன. வளர்ந்தோர் வாக்குரிமை மூலம் மக்களின் சமத்துவம் வலுப்பெற்றது. கடவுளின் முன்னர் எல்லோரும் சமம் என்ற கருத்தும் பெருகியது. பொருளாதார ஏற்றத்தாழ்வு இருந்தாலும் எல்லோரும் சமம், ஏன்? எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கருத்து வேரூன்றிவிட்டது. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், பொருளாதார வாழ்வில் எற்பட்ட திருப்பங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் எல்லாம் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றுகின்றன. இக்காரணங்களால் கிராமிய வழிபாட்டு முறைகளும் மாறுகின்றன ; மாறிக்கொண்டே வருகின்றன. தொழிலாளர்கள் எமது சமுதாயத்திலே தோன்றிய புதியதொரு கூறு. இவர்கள் அன்னதானம், நவராத்திரி பூசை, சிவராத்திரி பூசை போன்றவற்றை தொழில் நிலையங்களில் செய்விக் கின்றனர் ; ஆனால் சிலர் ஆட்டுக்கடாவை வளர்த்துக் கோயிலிற் பலியும் இடுகின்றனர். ஈழத்து கிராமிய வழிபாட்டு முறைகளும் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுக்கொண்டே வருகின்றன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் வழிபட்ட பின்னர் மோட்டார் வண்டி ஒன்றிலே ஒருவர் கொழும்பிற்குச் செல்கின்றார். நெடுஞ்சாலையில் உள்ள முறிகண்டிப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி செல்லுகின்றார். வேதாகம வழிபாட்டிற்கும், கிராமிய வழிபாட்டிற்கும் இவரின் மதவாழ்வில் இடம் உண்டு. இதுவே எதிர்காலத்தையும் ஒரு வகையில் உணர்த்துகின்றது.

*நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு*
*பதிப்பாசிரியர் ; வித்தியானந்தன்*
*அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்குழு*
*கொழும்பு - 1974*

# சித்தர் பரம்பரை - ஓர் ஆய்வு

தமிழ் கூறும் நல்லுலகில் இன்று சித்தர் பரம்பரை ஒன்று முக்கியமான இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் தோன்றிய இந்தப் பரம்பரை ஈழத்திலும் நன்கு வளர்ச்சியுற்றுள்ளது. இந்தியாவில் தோன்றிய மதஅலை யாவும் ஈழத்திலும் பரவின. இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு பல. இதனால் இந்தியாவில் தோன்றிய இயக்கம் பலவும் மாறுதல் அடைந்தன ; திரிபுற்றன. ஆனால் இலங்கையில் பெரும்பாலும் 16ஆம் நூற்றாண்டு வரையும் அமைதி நிலவியது. கி.பி 1505இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். இதன் பின்னரே இலங்கையில் புதுப்போக்குத் தொடங்கியது என்பர். இலங்கையில் சைவ சித்தாந்தம், பௌத்தம் தூய்மை கெடாது பேணப்பட்டன என்பர் ஆராய்ச்சியாளர். சைவமதத்தின் உட்பிரிவு ஒன்று சித்தர் இயக்கம். இது தமிழ் நாட்டிலிருந்து உலகில் ஏனைய பாகங்களுக்குப் பரவியதென்பர் ஒருசாரார்.

சித்தர் இயக்கம் தமிழ் நாட்டிலிருந்து வட இந்தியாவிற்கும் போனது. வட இந்தியாவிலிருந்து இது சீனம், மத்திய கிழக்கு, மத்திய ஐரோப்பா ஆகிய இடங்களுக்குப் பரவியது எனவும் கருதுவர் தொன்மை நம்பிக்கை உடையவர். வரலாற்று அடிப்படையில் நோக்குமிடத்து தமிழ் நாட்டில் வாழ்ந்த முதலாவது சித்தர் திருமூலர் எனக் கொள்வாரும் உளர். இவரின் வாழ்க்கையைச் சுற்றி தொன்மைக் கதைகள் பலவும் பிணைந்துள்ளன எனவும் ஒரு சாரார் சுட்டிக்காட்டுவர். சைவ சித்தாந்தக் கோட்பாடுகளுக்கு வடிவம் கொடுத்தவர் திருமூலர் எனவும் கொள்வர். பாரசீகப் பாடலாம் உமார்கயாம் பாடலிற் சித்தர் கருத்து அடங்கியுள்ளது என்பர் பல ஆய்வாளர்.1 இவரின் பாடலை வெறும் காமக் கண்ணுடன் நோக்கார் இவர். இப்பாடலில் வரும் மங்கை அருள் வடிவம். அவள் கையில் இருக்கும் மதுக்கிண்ணம் அருட் கலசம். அதிலிருந்து வடியும் மது அன்பு நெறி. அதைப் பருகும்

அடியவன் ஆன்மா.2 இப்படி மெய்பொருள் விளக்கம் தரும் மேலைத்தேயப் புலவரும் உளர்.3 உமார்கயாம் புகழ்பெற்ற கணித மேதை ; காலக் கணியர். இவருக்கும் இந்திய சித்தர் இயக்கத்திற்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும். சித்தர் இயக்கம் போன்ற ஒரு போக்கு மத்திய ஐரோப்பாவில் கி.பி 13ஆம் நூற்றாண்டளவில் பரவியிருந்தது. அங்கு வாழ்ந்த கிறிஸ்தவரின் ஒரு சாரார் தம்மைத் தாமே சவுக்கால் அடிப்பர். அப்படி நோவை ஏற்படுத்திக்கொண்டு கடவுளை கூவி அழைப்பர்.4 இவரின் நடத்தை இலக்கிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.5 எடுத்துக்காட்டு ; கொனன்டோயில் தீட்டிய வரலாற்று நாவல் “வெள்ளைப் பிரிவுப்படை”. இது மேலும் ஆராயப்படவேண்டியது.

சித்தர் என்ற சொல்லின் பொருளை நோக்கலாம். சித்தர் என்றால் முழுமையானவர் என்பது ஒருபொருள். இச்சொல் முருகனையும் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது.6 அறுபடை வீடுகளில் ஒன்று திருவாவினன்குடி. இங்கு கோயில் கொண்டருளும் முருகன் சித்தர் என்ற பெயரைப் பெற்றுள்ளான். சித்தர் என்ற சொல் கம்ப இராமாயணம் போன்ற நூலிலும் இடம்பெற்றுள்ளது. புகழ்பெற்ற எடுத்துக்காட்டு மணிவாசகர் கையாண்ட “அட்டமாசித்தி அருளி” என்ற அடி. இது “கீர்த்தித் திருவகவல்” பாடலில் இடம்பெற்றுள்ளது.7 இதற்கு உரை செய்த அறிஞர் கா.சுப்பிரமணியம்பிள்ளை எழுதியவை.8 “எட்டுப் பெருஞ் சித்திகளாவன அணுவாதல், மேருவாதல், எளிதாதல், பழுவாதல், எங்கும் இயங்குதல், விரும்பிய இன்பம் பெறுதல், முத்தொழில் புரியும் முதன்மை, தன்வயப்படுதல்....” இவ்விடத்தில் நவநீதகிருட்டிண பாரதியார் உரையையும் நோக்குதல் நன்று.9 அட்டமா சித்தியை மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை “எட்டுப் பெறுபேறு” என்பர்.10 பி. இராமநாதன் யாத்த அகராதி மேல்வருமாறு கூறும்.11

| வடமொழி | தமிழ் |
|---|---|
| அணிமா | உயிர்போலாதல் |
| மகிமா | நன்று பெருத்தல் |
| கரிமா | இரும்பு மலையிலுங் கனத்தல் |
| இலகிமா | பஞ்சுபோன்று கனமின்மை ஆதல் |
| பிராத்தி | வேண்டுவன அடைதல் |
| பிராகாமியம் | நினைத்த இன்பம் பெறுதல் |
| ஈசத்துவம் | கடவுள் ஆதல் |
| வசித்துவம் | யாவரும் வணங்கி நிற்றல் |

கடும் நோன்பு இருந்து எட்டுப் பெறுபேறு பெற்றவர் சித்தர். இது பற்றிய கருத்து வேற்றுமை இல்லை. இனித் தூய்மையான சைவசித்தாந்திகளின் நோக்கிற் சித்தரை நோக்கலாம். சைவசித்தாந்தம் சீரிய நோக்குடைய போக்கு. இதில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்படிகள் உண்டு. யோக நிலைக்கு வந்தவர் மெய்ஞான நிலையை அடைதல் வேண்டும். அதனை விடுத்து யோக நிலையில் நின்று சித்து விளையாடினால் அப்படிச் செய்பவர் ஞான நிலையாம் ஆடல் வல்லான் அடிசேர மாட்டார். இதனைச் சைவ சித்தாந்திகள் வலியுறுத்துவர். இதனால் "சித்தர்க்கு முத்தியில்லை" என்ற கூற்று எழுந்தது. யோக நிலையில் நிற்பவர் அருட்செல்வப் பேறாம் மூன்றாம் படியில் நிற்பவர். இவர் தாம் பெற்ற பெரு நிதியைச் சித்து விளையாட்டில் செலவு செய்தால் ஞான நிலை அடைய வழி இல்லை என வாதமிடுவர் சைவ சித்தாந்த நெறி நிற்பவர். இவர்களின் கருத்துப்படி திருமூலருக்கு முன்னரே பழனிமலைச் சாரலில் சித்தர் பலர் வாழ்ந்தனர். இவர்கள் மருத்துவம், காலக்கணிப்பு, அன்புநெறி, தமிழ் அறிவு ஆகியவற்றில் கைதேர்ந்தவர். இவர்கள் கையாண்ட காலக் கணிப்பு, மூலிகை மருத்துவம் என்பன பின்னர் எங்கும் பரவின.

தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தரை ஆய்வுத் தேவைக்காக நான்கு பிரிவாக பிரிக்கலாம். இப்பொழுது வழக்கிலிருக்கும் பதினெண் சித்தருக்கு முந்தியும் பிந்தியும் பல சித்தர் வாழ்ந்தனர். இவர்கள் பற்றிய விரிவான ஆய்வு தேவை.

அ) மதவாழ்வை மட்டும் மேற்கொண்ட சித்தர்
ஆ) சோதிடம் என்னும் காலக்கணிப்பில் ஈடுபட்டவர்
இ) மூலிகை மருத்துவத்தில் ஈடுபட்டவர்
ஈ) தமிழ்ப் புலமையில் ஈடுபட்டவர்

இந்த நான்கு சாராரிலும் ஒரேயொருவர் ஒரு துறையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட துறையிலும் ஈடுபட்டதுமுண்டு. இந்த ஈடுபாட்டினால் தமிழர் சால்பு பல துறையிலும் வளம்பெற்றது. இதற்கு எடுத்துக்காட்டாகத் தரக்கூடிய சான்று வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) சித்தர் மெய்ப்பொருள் விளக்கம் | - | சித்தாந்தசிகாமணி<br>சித்தாந்தத் தொகை<br>சித்தாசனம்<br>ஞானக் கோவை |
| 2) காலக் கணிப்பு | - | சித்தர் பஞ்சாங்கம் |
| 3) மருத்துவம் | - | சித்த வைத்தியம்<br>சித்தர் மூலிகை<br>சித்தர் குளிகை |

4) சித்து நெறி - சித்தாச்சிரமம்
சித்தாசனம்
சித்தாதிகள்

இனி ஈழத்துச் சித்தர் நெறி பற்றி நோக்கலாம். ஈழத்தில் வாழ்ந்த 16 சித்தரைப் பற்றி ஆத்மசோதி நா. முத்தையா "ஈழத்துச் சித்தர்கள்" என்ற தமது நூலில் நன்கு எடுத்துரைத்துள்ளார்.12 இந்தச் சித்தர்கள் ஈழத்து மதவாழ்க்கையை நன்கு வளம்படுத்தியுள்ளனர். இவர்கள் மக்கள் மத்தியில் வாழ்ந்து அறநெறியை நன்கு போதித்தனர். இவர்களுடைய போதனை மக்களை நல்வழியில் இட்டுச் சென்றது. இந்தச் சிந்தனை சிலவற்றை நூல்வடிவாக்கியுள்ளேன்.13 ஈழத்துச் சித்தர் பரம்பரையை தொடக்கி வைத்தவர் 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கடையிற் சுவாமிகள் என்ற கருத்தும் நிலவுகின்றது. ஆனால் ஆழ்ந்து நோக்குமிடத்து, கடையிற் சுவாமிகளுக்கு முன்னரே ஈழத்துச் சித்துநெறி செல்பவர் பலர் இருந்தனர். கண்டி அரசனின் மனைவியின் தீராத நோயைத் தீர்க்க யாழ்ப்பாணத்து அரசன் தன் தம்பி பரநிருபசிங்கத்தை அனுப்பி வைத்தான். செவிவழி வந்த கதைப்படி இவன் சித்து நிரம்பியவன். இவனைப் பற்றிக் குறிப்பிடும்போது பரநிருபசிங்கம் செய்த "சூட்சத்தைக் குறித்துக் கண்டிராசன்" என யாழ்ப்பாண வைபவமாலை கூறும்.14 இந்த நிகழ்ச்சி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய "சங்கிலி நாடகம்" என்னும் நூலிலும் இடம்பெறுகின்றது.15 இவனைத்தவிர போசராச பண்டிதர், சோமன், இராமலிங்க ஐயர், சபாபதி ஐயர் போன்ற பலருஞ் சித்து நிரம்பியவராக இருந்தனர். தமது சித்தர் போதனையின் மூலம் மக்களை நல்வழிப்படுத்தி வாழ்வை வளம் படுத்தினர். இவர்களைத் தவிர ஒல்லாந்தர் ஆட்சியின் கடைசிக் காலத்தில், 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில் வாழ்ந்த அறிஞர் பலரும் சித்து நெறியிற் கைதேர்ந்தவர். எடுத்துக்காட்டாக இருவரின் பெயரைத் தரலாம். ஒருவர் வரதபண்டிதர் ; மற்றவர் கூழங்கைத் தம்பிரான். வரதபண்டிதர் பெரும் புலவர் ; சிவராத்திரி புராணம் பாடியவர் ; காலக்கணிப்பு நூல் யாத்தவர்.16 இவரின் வாழ்க்கைக் குறிப்பு சுவையானது. தான் விரும்பாத, பிழை செய்தவரை முனியுந் தன்மை உடையவர் வரதபண்டிதர். இவரைப் பற்றிச் செவிவழிவந்த கதை பலவும் உண்டு. அண்மைக் காலத்தில் வாழ்ந்தவர் தையிட்டி யோகவன ஐயர். இவர் இலக்கணப் பெருங்கடல் கணேசையருக்குப் பெண் கொடுத்த மாமனார். இவர் சோதிடநூல் வல்லார் ;17 சித்து நிரம்பியவர் என்பர். இவர் நினைத்த காரியஞ் சொல்பவர் ; மக்களுக்கு அவ்வப்போது சித்தர்வழி நின்று போதனையுஞ் செய்வார். கனகசபாபதி யோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமி சித்து நிரம்பியவர் என்பர்.

தமிழ் நாட்டில் இருந்தது போல யாழ்ப்பாணத்தில் சித்தர் பலர் வாழ்ந்தனர். இவரிற் பலர் பாடல்களையும் யாத்தனர். "ஆவேசம் வரும்போது" பாடல்கள் யாவும் இவரின் வாயிலிருந்து பொழியும். இவற்றுள் யோகர் சுவாமிகளின் பாடல் சில மட்டுமே அச்சில் வந்ததாகத் தெரிகின்றது. ஏனையவை காலதேவனுக்கு இரையாகி விட்டன போலும். ஈழத்துச் சித்தர் பலரின் போதனை பலவும் சிறு பாடல்களாகவே அமைந்துள்ளன. எனக்குக் கிடைத்த சிலவற்றை "ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து" என்னும் நூலிலே குறிப்பிட்டுள்ளேன். இந்தப் பாடல்களுக்கு விளக்கக் குறிப்புந் தேவை.

சித்தர் வைத்தியம் புகழ்பெற்றது.[18] அதேபோன்றதுதான் சித்தர் அருள் வாக்கு.[19] இவை யாவும் குறிப்பு மொழியும் குழூஉக்குறியும் நிரம்பியவை. இவை இலகுவில் விளங்க முடியாதவை. தமிழ் நாட்டிலிருந்த சிந்தனைப் பாடலை "பதினென் சித்தரின் பெரிய ஞானக்கோவை" என்னும் நூலாக வா. சரவணமுத்துப் பிள்ளை தொகுத்து வெளியிட்டுள்ளார். இதில் பழைய சித்தரை விட 28 சித்தர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற குறிப்பும் அடங்கியுள்ளது. இச் சித்தரில் இசிலாமியரும் இடம்பெறுவர். எடுத்துக்காட்டு ; பிசுமில்லாகிர் றகுமானிற்ற இறகீம். சித்தர் பாடலில் புகழ்பெற்றது வருமாறு

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொ ணெனன்று சொல்லுமந்திர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவையை யறியுமோ?"

இது சித்தருக்கே பொருந்தும். சரியை நிலையில் நிற்பவர்க்குப் பொருந்தாது எனவும் வலியுறுத்துவாரும் உளர். எது எப்படியாயினும் சித்தர் பரம்பரை இனம், மதம், மொழி, பால் ஆகியவற்றைக் கடந்து நிற்கும் இயக்கமாக மாறி உருப்பெறத் தொடங்கியது என்பது தெளிவு. இது பற்றிய விரிவான ஆய்வு தேவை.

01. உமார்கயாம் பாடல் - தேசிகவிநாயகம்பிள்ளை
தமிழ்க்குமரி - பாலபாரதிசுப்பிரமணியயோகி
Omar Khayam - Nicolas (Translation)
Omar Khayam - Fitzgerald

02. "உமார்கயாம் பாடல்" - த.சண்முகசுந்தரம்
" ஞாயிறு தினகரன்" - (25-3-1956)

03. Omar Khayam - Nicolas French Edition

| | | | |
|---|---|---|---|
| 04. | Flagellants | - | OXFORD DICTIONARY |
| 05. | The white company<br>Longmans Edition | -<br>- | Sir Arthur Conan Doyle<br>page 66 |
| 06. | திருமுருகாற்றுப்படை | - | 176 (உரை) |
| 07. | கீர்த்தித் திருவகவல் | - | வரி 63 |
| 08. | திருவாசகம் | - | கா. சுப்பிரமணியம்பிள்ளை உரை, பக். 27 |
| 09. | திருவாசக ஆராய்ச்சிப் பேருரை | - | பக். 98 |
| 10. | வடசொற்றமிழ் அகரவரிசை | - | நீலாம்பிகை |
| 11. | Twentieth Tamil Dictionary | - | P. Ramanathan |
| 12. | "ஈழத்துச் சித்தர்கள்" | - | நா. முத்தையா |
| 13. | ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து | - | த. சண்முகசுந்தரம் |
| 14. | யாழ்ப்பாண வைபவமாலை | - | குல. சபாநாதன் பதிப்பு. பக் - 57 |
| 15. | சங்கிலி நாடகம் | - | க. கணபதிப்பிள்ளை பக். 04 |
| 16. | சிவராத்திரி புராணம் | - | வரதபண்டிதர் பதிப்பு, மறவன்புலவு கணபதிப்பிள்ளை, முன்னுரை. |
| 17. | ஞானசூரியன் | - | இ. சுந்தரராச சர்மா. பக் - 11 |
| 18. | தமிழ் மருத்துவ மாண்பு | - | சிற்சபை, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு விழா மலர் பக் - 183 |
| 19. | சித்தர் பாடல்களிற் குறிப்பு மொழியும் குழூஉக்குறியும் | - | இரா. மாணிக்கவாசகம், அதே மலர், பக். 273 |


*சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்,*
*மணிவிழாச் சபை வெளியீடு,*
*துர்க்காபுரம், தெல்லிப்பழை.*

# நன்றி

எமது குடும்பத் தலைவர் அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளை
அவர்களின் இறுதிக் கணத்தில் வைத்தியசாலைக்கு
அழைத்துச்சென்ற வாகனச்சாரதி திரு. நிசாந்தன்,
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின்
வைத்தியர்கள், பணியாளர்கள்,
யாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவு
வைத்தியர், பணியாளர்கள்,
வைத்தியகலாநிதி நந்தகுமார்,
வைத்தியகலாநிதி சிறீதரன்,
திரு நடராஜா
ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டோர்,
தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்கள்,
உடுவில் பிரதேச செயலக ஊழியர்கள்,
யா/யூனியன் கல்லூரிச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரிச் சமூகம்,
பரிஸிலும் லண்டனிலும் நேரிலும்
தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் பகிர்ந்தவர்களுக்கும்
அந்தியேட்டி கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும்
இந்நூல் வெளிவர காரணமாக
திரு. ரமேஸ் (ஆசிரியர்)
திரு. ஸ்ரீகுமரன் (அதிபர், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்)
கவிஞர் கருணாகரன்
திரு. சௌந்தரராஜன் (நூலகர், பொதுநூலகம், சுன்னாகம்)
பேராசிரியர் எம். ஏ. நுஃமான்
மறைந்த அறிஞர் தமிழருவி சண்முகசுந்தரம் குடும்பத்தினருக்கு
எங்களின் உளப்பூர்வமான நன்றி.

223, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
14-01-2012

**குடும்பத்தினர்**



# அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளை நினைவு வெளியீடு

"சேனாதி" என அறியப்பட்ட அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளை இரண்டு சகோதரர்களுடனும் இரண்டு சகோதரிகளுடனும் தெல்லிப்பழையில் பிறந்தவர். இளமையிலே தாயாரை இழந்த இவர் சகோதரர்களின் அரவணைப்பில் வளர்ந்தவர். இதன் காரணமாக சகோதரர்களிலும் அவர்களின் பிள்ளைகளிலும் பேரன்பு கொண்டவர். கருகம்பனையைச் சேர்ந்த இராசமணியைக் கரம் பற்றி, மலர்விழி, மதிவேணி, மலர்ச் செல்வி, மணிசேகரன் மணிவண்ணன் ஆகிய பிள்ளைகளைப் பெற்றவர்.

நீண்டகாலமாக தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்திலும் இடையில் சிறிதுகாலம் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்திலும் சாரதியாகப் பணியாற்றியவர். யுத்தத்தின் கொடியதருணங்களில் தென்னிலங்கைக்குச் சென்று உணவுப் பொருட்களை கொண்டுவந்து உணவு விநியோகம் சீராக நடைபெறுவதற்கு உதவியவர். இதன் பொழுது இவரது வாகனம் ஹெலிகொப்ரர் தாக்குதலுக்கு ஆட்பட்ட சம்பவங்களும் உள.

சாந்தசொரூபியான அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளையின் ஒரே பொருளியல் தேட்டமான தெல்லிப்பழை வீடு முற்றாகத் தரை மட்டமாக்கப்பட்ட போதும் ஊருக்கு வந்ததே எனக்கும் வந்தது என எடுத்துக் கொண்டார். என்றாவது ஒரு நாள் தனது சொந்தக் காணிக்குத் திரும்பலாம் எனும் நினைவில் வாழ்ந்தவர் தனது 79வது வயதில் 15.12.2011 அன்று மாரடைப்பால் காலமானார்.

அன்னாரின் நினைவாக ஈழத்தின் நாட்டாரியலில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு மறைந்த அறிஞர், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர், தமிழருவி தம்பு சண்முகசுந்தரம் அவர்களின் ஆறு கட்டுரைகளை தொகுத்து வெளியிடுகின்றோம். இந்நூல் எமது குடும்பத் தலைவரின் நினைவைக் கனதிப் படுத்தும் என்பது எமது துணிபு.



த.சண்முகசுந்தரம்